செயலாற்றுகை அறிக்கை

2022

இலங்கை பொலிஸ்

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

இலங்கை பொலிஸ்

செலவினத் தலைப்பு இலக்கம்:- 225

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனிதவள விபரம்

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

1865 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிரித்தாணியா ஆட்சிக் காலத்தில், பொது மக்களுக்கு ஒழுங்கமைவு முறையிலான சேவையினை வழங்கும் நோக்கில், பொலிஸ் சேவை 1866 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை 156 ஆண்டுகளுக்கு அண்மித்தக் காலப் பகுதி இலங்கை பொலிஸ் "நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும்" பாதுகாத்து பேணிச் செல்லும் பாரதூரமான கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுகின்றது.

மக்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு துறைகளினதும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி, சமூகத்தின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பரந்தளவிலான பொறுப்பு இலங்கை பொலிஸிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. சமூகத்தின் அமைதிக்கும் நல்லிருப்பிற்கும் அடிப்படையாகக் கொள்ளப்படும் குற்றங்களை இல்லாதொழித்தல் மற்றும் நிவாரணம், போதைப் பொருள் பாவனையைத் தடுத்தல், ஊழல் ஒழிப்பு, மோட்டார் வாகனக் கட்டுப்பாடு, சுற்றாடல் பாதுகாப்பு, அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் பிரமுகர்களின் பாதுகாப்பு போன்ற முக்கியமான கடமைப் பொறுப்புகள் பொலிஸின் விடயவெல்லைக்கு உட்டுபடுகின்றன. மேலும், தடைநீக்கச் சான்றிதழ் வழங்குதல், பொது மக்கள் தொடர்பு கொள்ளும் வகையில் உருவாக்கப் பட்டுள்ள 119 என்ற அவசர அழைப்புச் சேவை ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகளுக்கு உடனடியாக பதிலளிக்கும் சேவை நடைமுறைப்படுவதுடன், அதன்மூலம் மக்கள் மிக விரைவாக பொலிஸ் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பதவி படிநிலையைக் கொண்ட இலங்கை பொலிஸ் அதன் நிறுவனக் கட்டமைப்பின்மூலம் நிறுவனத்தின் செயல்பாட்டிற்கு நன்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கொண்டுள்ளது.

நிறுவனக் கட்டமைப்பில் மிக உயர்ந்த பதவியான பொலிஸ்மா அதிபரின் மேற்பார்வையின் கீழ், கட்டமைப்பின் ஏனைய பதவிகள் செயற்படுவதுடன், அதன் பிரகாரம் பொலிஸ்மா அதிபர், சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், பிரதி பொலிஸ்மா அதிபர், சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், பிரதான பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர், உயர்மட்ட சார்ஜென்ட், பொலிஸ் சார்ஜென்ட், பொலிஸ் சார்ஜென்ட் சாரதி, பொலிஸ் கான்ஸ்டபிள், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி என்ற வகையில் பதவி படிநிலை மேலிருந்துகீழ்வரை நடைமுறைப்படுகின்றது.

இந்த உத்தியோகபூர்வ படிநிலையானது ஒரு நிறுவனக் கட்டமைப்பால் செயல்படுத்தப்படுவதுடன், அந்தக் கட்டமைப்பு பிரதானமாக மக்களுடன் நேரடியாக தொடர்புபடுகின்ற பிராந்திய பொலிஸ் பிரிவுகள் மற்றும் குறித்த பிராந்திய பிரிவுகளில் கடமைகளுக்காக நிருவாகத்துடனான மற்றும் ஒத்துழைப்பு சேவைகள் வழங்குகின்ற செயற்பாட்டு பிரிவுகள் என்று இரண்டு வகையில் அமைந்துள்ளது.

பிராந்திய பிரிவுகளின் கட்டமைப்பில் உயர் மட்டத்தில் மாகாணங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன், அதன் நடவடிக்கைகள் சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரின்கீழ் செயல்படுகின்றது. மாகாணங்களுக்குரிய ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பொறுப்பாக பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அவரின் கீழ் இயங்கும் மாவட்டத்தைப், பல பிராந்திய பொலிஸ் பிரிவுகளுக்கு பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்படுகிறது. இந்தப் பிராந்திய பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பாக சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் அல்லது பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாறான 45 பொலிஸ்

பிரிவுகள் நாட்டில் செயல்படுகின்றன.குறித்த பிராந்திய பொலிஸ் பிரிவொன்று, பல பொலிஸ் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு அந்த மாவட்டங்களுக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறான பொலிஸ் மாவட்டத்திற்கு பல பொலிஸ் நிலையங்களை உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக 160 பொலிஸ் மாவட்டங்கள் நாட்டில் அமைந்துள்ளதுடன், 2022.12.31 ஆம் திகதியில் குறித்த பொலிஸ் மாவட்டங்களுக்குரியதாக 607 பொலிஸ் நிலையங்கள் நாடுபூராகவும் செயற்படுகின்றன.

எல்லா பொலிஸ் நிலையங்கள், தலைமையக பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொதுவான பொலிஸ் நிலையங்கள் என்ற வகையில் வகைப்படுத்தி அனைத்து பொலிஸ் நிலையங் களையும் பல்வேறு மட்டங்களின் கீழ் தரப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி A1 தரத்தில் 46 பொலிஸ் நிலையங்களும், A1 அதிதரத்தில் 83 பொலிஸ் நிலையங்களும், A2 தரத்தில் 55 பொலிஸ் நிலையங்களும், A3 தரத்தில் 129 பொலிஸ் நிலையங்களும், B தரத்தில் 184 பொலிஸ் நிலையங்களும், C தரத்தில் 31 பொலிஸ் நிலையங்களும், D தரத்தில் 79 பொலிஸ் நிலையங்களும் என்ற வகையில் 2022.12.31 ஆம் திகதியில் இந்த 607 பொலிஸ் நிலையங்களை தரப்படுத்தப்பட்டுள்ளது. தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பாக நிலைய அதிகாரி ஒருவரும் நியமனம் செய்துள்ளதுடன், அவர்களின் கீழ் பணியாற்றும் பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் சார்ஜென்ட்கள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மூலம் நேரடியாக பொது மக்களுக்கு பொலிஸ் சேவைகள் வழங்கப்படுகின்றன.

பொலிஸ் கடமைப்பொறுப்புகளுக்கு ஏற்புடையதாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் உத்தியோகபூர்வ பதவி படிநிலைகள் செயற்படுகின்றன. அதன்படி குற்றங்கள், போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள், வாகன போக்குவரத்து, பிரபுக்களின் பாதுகாப்பு, உதவி சேவைகள் மற்றும் நடப்பு விவகாரங்கள் ஆகிய விடயங்களுக்கு பொறுப்பாக சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களை நியமனம் செய்துள்ளதுடன், அவர்களின் கீழ் மாவட்டங்களாக ஒரு விடயம் அல்லது பல விடயங்களை சேர்க்கப்பட்டு அத்தகைய மாவட்டங்களுக்கு பொறுப்பாக பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது. அந்த மாவட்டங்களின் கீழ் இயங்கும் 79 செயற்பாட்டு பொலிஸ் பிரிவுகள் 2022.12.31 ஆம் திகதியில் செயற்படுவதுடன், குறித்த பிரிவுகளுக்கு பொறுப்பாக சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்லது பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், பணிப்பாளர் ஒருவர் என்ற வகையில் நியமனம் செய்து உரிய பிரிவில் நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இலங்கை பொலிஸின் கீழ் இயங்கும் சிறப்பு செயற்படையணியானது, விசேட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றும் ஒரு பிரிவாகும். பல்வேறு சுற்றிவலைப்புகளின் மூலம் வினைத்திறனுடன் செயற்பட்டு, இலங்கை பொலிஸிடம் தனது ஒத்துழைப்பை வழங்கி வருவதுடன், படையின் உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை 8272 ஆகும்.

பொலிஸ் கடமைகளுக்கு தேவையான பல்வேறு நிபுணத்துவ அறிவு பெற்றுக்கொள்வதற்காக உதவிச் சேவையும் நடைமுறைப்படுவதுடன், அதன்கீழ் மருத்துவர், தாதியர், பொறியியலாளர், சமையல், தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் போன்ற நிபுணத்துவ சேவைகளின் பொருட்டு 1272 இற்கு அண்மித்த உத்தியோகத்தர்கள் சிறப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக இலங்கை நிருவாக சேவையின் அலுவலர்கள் மற்றும் அரசாங்கத்தின் பல்வேறு சேவைகளுக்குரிய கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், மொழிபெயர்ப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் அலுவலக பணியாளர்கள் போன்ற திணைக்களம் சாராத பதவிகளுக்குரிய அலுவலர்களும், குற்றவியல் நிபுணர்கள், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு தொழில்சார் துகைளைச் சார்ந்த திணைக்களத்து அலுவலர்களும் அடங்கலாக சிவில் பதவியணி அலுவலர்கள் 4279 இற்கும் அதிகமான எண்ணிக்கையினர் பொலிஸ் கடமைகளின் பொருட்டு குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பை வழங்கி சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

1.2 நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பணி



நோக்கு

குற்றம் மற்றும் வன்முறை
குறித்து அச்சமின்றி
நம்பிக்கையுடன்
வாழக் கூடிய சமாதானம் மிக்க
சூழல் ஒன்றை உருவாக்கல்


செயற்பணி

அனைவருக்கும் சமமான
எவருக்கும் தீங்கு விளைவிக்காது
குற்றங்களையும் பயங்கரவாதத்தையும்
தடுப்பதற்கும், சமாதானத்தைப்
பாதுகாப்பதற்கும்,
நாட்டில் சட்டத்தைப் பேணுவதற்கும்
இலங்கை பொலிஸ்
நம்பிக்கையுடன் செயற்படக் கட்டுப்பட்டுள்ளது.

1.3 பிரதான பணிகள்


- பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டத்தைப் பேணுதல்
- குற்றங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தல்
- குற்றப் புலனாய்வு மற்றும் வழக்குகளைக் கையாளுதல்
- வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடு
- பிரமுகர்கள் பாதுகாப்பு
- சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அனர்த்த நேரங்களில் உரிய துறைகளுக்கு உதவி வழங்குதல்
- கலகங்கள், ஊழல் ஒழிப்பு மற்றும் பல்வேறு முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்கல்
- பொலிஸ் தடைநீக்கச் சான்றிதழ் மற்றும் பின்னணி அறிக்கைகளை உரிய துறைகள் மற்றும் நபர்களுக்கு வழங்குதல்

1.4 அமைப்பு அட்டவணை




1.5 இலங்கை பொலிஸின் பிரதான பிரிவுகள்


- **பிரதேச பொலிஸ் பிரிவுக் கட்டமைப்பு (பிரதேச பொலிஸ் பிரிவுகளின் எண்ணிக்கை 45 ஆகும்)**



♦ பொலிஸ் பிரிவுகளின் கட்டமைவு (பொலிஸ் செயற்பாட்டு பிரிவுகளின் எண்ணிக்கை 75 ஆகும்)



♦ **விசேட செயற்படையணியின் கட்டமைப்பு**



1.6 அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள்/ நிதியம்

அட்டவணை இலக்கம் - 01

தொடர் இலக்கம்	நிதியத்தின் பெயர்	2022.12.31 ஆம் திகதியில் மீதி
01	பொலிஸ் பரிசு நிதியம்	52,571,185.00
02	பொலிஸ் அனுசரணை நிதியம்	31,105,080.97
03	பொலிஸ் சுக்கவிஹரண நிதியம்	15,067,938.04

மூலம் - கணக்காளர் - நிதி பொலிஸ் தலைமையகம்

1.7 வெளிநாட்டுதவி கிடைக்கப்பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்

அட்டவணை இலக்கம் - 2

1.	அ) கருத்திட்டத்தின் பெயர்	சீனா குடியரசின் நன்கொடை
	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	Hytera communication cooperation limited
	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம்	சீனா குடியரசின் நன்கொடை
	ஈ) கருத்திட்டத்தின் காலவெல்லை	காலவெல்லை குறிப்பிடப்படவில்லை
2.	அ) கருத்திட்டத்தின் பெயர்	CCTV
	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	MAG நிறுவனம்
	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம்	ரூபா. 841850.00
	ஈ) கருத்திட்டத்தின் காலவெல்லை	2022.04.06 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரம்
3.	அ) கருத்திட்டத்தின் பெயர்	ஆயத அலுமாரிகள்
	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	MAG நிறுவனம்
	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம்	அறியப்படமாட்டாது
	ஈ) கருத்திட்டத்தின் காலவெல்லை	2022.08.01 தொடக்கம் 2022.10.01

4.	அ) கருத்திட்டத்தின் பெயர்	களுத்துறை இலங்கை பொலிஸ் கல்லூரி, மற்றும் எல்பிட்டிய, பொரலந்த, பஹலகம போன்ற பிரிவு களின் பொருட்டு புதிய ஆயுத கிடங்குகளை நிருமாணித்தல்
	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	MAG நிறுவனம்
	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம்	வழங்கப்படவில்லை
	ஈ) கருத்திட்டத்தின் காலவெல்லை	03 மாதங்கள்
5.	அ) கருத்திட்டத்தின் பெயர்	இலங்கை வாகன விபத்து தரவு முகாமைத்துவ முறைமை (SLADMS)
	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	உலக சுகாதார நிறுவனம் (WHO)
	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம்	இதுவரை இத் திட்டத்தின் பொருட்டு செலவினம் மதிப்பிடப்படவில்லை.
	ஈ) கருத்திட்டத்தின் காலவெல்லை	இந்த காலப்பகுதிக்கு ஏற்புடையதாக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பமிடப்படவில்லை.
6.	அ) கருத்திட்டத்தின் பெயர்	Fiber Optic தொழில்நுட்ப கருத்திட்டம்
	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	சர்வதேச பொலிஸ் தலைமையகம்
	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம்	25000 ம் டொலர்
	ஈ) கருத்திட்டத்தின் காலவெல்லை	2022 ஆம் அண்டு தொடக்கம் 05 ஆண்டுகள்
7.	அ) கருத்திட்டத்தின் பெயர்	ஆயுத கிடங்கு (கன்டேனர்)
	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	MAG நிறுவனம்
	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம்	வழங்கப்படவில்லை
	ஈ) கருத்திட்டத்தின் காலவெல்லை	2022 ஆம் ஆண்டு
8.	அ) கருத்திட்டத்தின் பெயர்	இந்திய கடன் திட்டம்
	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	இந்திய EXIM வங்கி
	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம்	நிதியிடல் 12 3,300,000,000.00
		நிதியிடல் 12 14,100,000,000.00
	ஈ) கருத்திட்டத்தின் காலவெல்லை	2021 - 2023

மூலம் - விசேட செயற் படையணி, களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரி, பொலிஸ் குதிரைப் படைப் பிரிவு, பொலிஸ் படை தலைமையகம், போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவு, பொது மக்கள் ஒழுங்கு முகாமைத்துவப் பிரிவு

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

முன்னேற்றம் 2022

2.1 குற்றங்கள், போதைப் பொருள் தொடர்பான குற்றங்கள், மதுபானம் மற்றும் ஏனைய குற்றங்கள்.

இலங்கை பொலிஸிடம் பதிவாகின்ற குற்றங்கள், புலனாய்வு பணிகளின் பொருட்டு அடிப்படையில் பாரிய குற்றங்கள் மற்றும் பாரியதற்ற குற்றங்கள் என்று வகைப்படுத்தலாம். இந்த பாரிய வகையிலான குற்றங்கள் வன்குற்றங்கள் இல்லாவிடின் பிடிக்கப்படல் குற்றங்கள் என்று அழைக்கப்படுவதுடன், அவ்வாறான குற்றங்கள் தொடர்பாக 26 தொகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாரியதற்ற குற்றங்கள் சிறு குற்றங்கள் என்றும் அழைக்கப்படுவதுடன், அவை நபர்களுக்கெதிராக சிறிய குற்றங்கள் மற்றும் சொத்துக்களுக்கெதிராக சிறிய குற்றங்கள் என்று வகைப் படுத்தலாம்.

மேலும் இந்த அத்தியாயத்தின் கீழ் இலங்கை பொலிஸிடம் பதிவாகின்ற போதைப்பொருள் தொடர்பான குற்றங்களைப் புலனாய்விற்கு உட்படுத்துவதுடன், அதன்மூலம் ஹெரோயின் உள்ளிட்ட உறக்கழுட்டுகின்ற பொருள்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று மதுபானம் தொடர்பான குற்றங்களின்கீழ் சட்டவிரோதமான மதுபானம் தொடர்பான குற்றங்களை உள்ளடக்கியுள்ளதுடன், பல்வேறு நியதிச்சட்ட சட்டங்களின்மூலம் தடை செய்யப்பட்ட குற்றங்கள் மற்றும் இலங்கை பொலிஸிடம் பதிவாகும் ஊழல் குற்றங்களும் இந்த அத்தியாயம் மூலம் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

2.1.1 வன்குற்றங்கள் - (பாரிய குற்றங்கள்)

வன்குற்றங்கள் என்பது பாரிய குற்றங்களாகும். முன்னர் குறிப்பிடப்பட்ட வகையில் இந்த குற்றங்கள் கைப்பற்றல் குற்றங்களாகவும் அழைக்கப்படுவதுடன், திணைக்களத்து கட்டளை சீ.2 மூலம் பதிவாக்கப்பட வேண்டிய குற்றங்களாகவும் அழைக்கப்படுகிறது. இவ்வாறான குற்றங்கள் 26 தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் பதிவாதலும், அது தொடர்பிலான தீர்வுகளின் முன்னேற்றமும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளுடன் ஒப்பீட்டு ரீதியாக பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

வன் குற்றங்கள் தொடர்பான அட்டவணையில் தொடர் இலக்கங்கள் 04, 16, 17, 25 இன்கீழ் காண்பிக்கப்படுகின்ற குற்றங்களது, நிதிசார் பெறுமதிகள் தொடர்பில் 2021 ஆம் ஆண்டில் நடைமுறையிலிருந்த பெறுமதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டுள்ளதுடன், இந்த அட்டவணையில் குறித்த திருத்தம் செய்யப்பட்ட நிதிசார் பெறுமதிகள் மற்றும் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன்படி 2021 ஆம் ஆண்டில் ரூபா. 25000/= ஆக காணப்பட்ட நிதிசார் பெறுமதிகள் ரூபா. 50000/= என்ற வகையிலும், ரூபா. 300000/= ஆக காணப்பட்ட நிதிசார் பெறுமதி ரூபா. 500000/= என்ற வகையிலும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. மேலும் இதற்கு முன்னர் காணப்பட்ட ஹெரொயின் கிராம் 2 அளவினை கிராம் 5 வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், உறக்கழுட்டும் பொருளான மெத் எம்பிட்டமின் (அயிஸ்) கிராம் 10 என்ற வகையில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

பாரிய குற்றங்கள் தொடர்பான அட்டவணை

அட்டவணை இலக்கம் - 03

	குற்றங்கள்	2020				2021				2022			
		பதிவாகிய	தீர்க்கப் பட்ட	ஆய்வு செய்யப் படுகின்ற	தீர்க்கும் சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப் பட்ட	ஆய்வு செய்யப் படுகின்ற	தீர்க்கும் சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப் பட்ட	ஆய்வு செய்யப் படுகின்ற	தீர்க்கும் சதவீதம்
1	வன்கொடுமை	633	563	70	89%	629	536	93	85%	582	509	73	87%
2	கடத்தல்	166	149	17	90%	172	155	17	90%	174	154	20	89%
3	தீ வைத்தல் அல்லது வெடி பொருட்களினால் அனர்த்தத்தை ஏற்படுத்தல்	338	255	83	75%	361	287	74	80%	509	396	113	78%
4	50000 ரூபாவிற்கு மேல் நட்டம் ஏற்படும் வகையில் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்கள்	323	292	31	90%	265	234	31	88%	532	433	99	81%
5	வீடுடைப்பு	6499	3791	2708	58%	6840	3759	3081	55%	8645	4846	3799	56%
6	படுகாயம் ஏற்படுத்தல்	892	872	20	98%	854	812	42	95%	923	873	50	95%
7	ஆபத்தான ஆயுதங்களினால் (கத்தி போன்றவை) காயம் விளைவித்தல்	1962	1891	71	96%	1843	1740	103	94%	1888	1750	138	93%
8	மனிதப் படுகொலைகள்	464	438	26	94%	521	495	26	95%	559	507	52	91%
9	மனிதப் படுகொலைக்கு முயற்சித்தல்/தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திக் கொள்ள உடந்தையாக இருத்தல்	103	102	1	99%	105	97	8	92%	113	101	12	89%
10	பெண்கள் துஷ்பிரயோகம் (16 வயதிற்கு மேற்பட்ட)	300	282	18	94%	256	245	11	96%	257	236	21	92%
11	நியதிச்சட்ட பெண்கள் துஷ்பிரயோகம் (16 வயதிற்குக் கீழான) பாதிக்கப்பட்டவரின் சம்மதத்துடன்	1292	1262	30	98%	1377	1341	36	97%	1391	1336	55	96%
	நியதிச்சட்ட பெண்கள் துஷ்பிரயோகம் (16 வயதிற்குக் கீழான) பாதிக்கப்பட்டவரின் சம்மதமின்றி	361	333	28	92%	344	319	25	93%	338	322	16	95%
12	சட்ட விரோத கூட்டங்கள் /கலகங்கள்	30	29	1	97%	15	13	2	87%	210	169	41	80%
13	கொள்ளை	2148	1442	706	67%	2277	1557	720	68%	3065	1950	1115	64%
14	இயற்கைக்கு முரணான குற்றங்கள் மற்றும் கொடூர பாலியல் துஷ்பிரயோகம்	677	661	16	98%	649	625	24	96%	571	543	28	95%
15	பலவந்தமாகப் பெற்றுக் கொள்ளல் /ஏதேனுமொரு ஆதனம் அல்லது பெறுமதியான பிணை அல்லது பெறுமதியான பிணையாக மாற்றக் கூடிய ஒப்பமிடப்பட்ட அல்லது முத்திரயிடப்பட்ட ஏதேனுமொன்று)	120	108	12	90%	115	92	23	80%	86	74	12	86%
16	500000/- இற்கு (ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியுடைய குற்றவியல் ரீதியிலான தவறான பயன்பாடு, குற்றவியல் ரீதியிலான நம்பிக்கை மீறல் மற்றும் மோசடி	2891	1506	1385	52%	2207	971	1236	44%	2339	1165	1174	50%
17	50000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பயிர்ச்செய்கைப் பொருட்களைத் திருடுதல்	59	51	8	86%	63	50	13	79%	52	45	7	87%
	50000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய மாடுகளைத் திருடுதல்	524	415	109	79%	365	298	67	82%	726	552	174	76%
	50000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய ஆதனங்களைத் திருடுதல்	4073	2770	1303	68%	4801	3167	1634	66%	5404	3542	1862	66%
18	போலி பணத்தாள் வைத்திருத்தல் மற்றும் அச்சிடுதல்	68	64	4	94%	40	40	0	100%	36	36	0	100%
19	அரசுக்கு எதிரான முறையில் மேற்கொள்ளப்படும் குற்றங்கள்	1	1	0	100%	1	1	0	100%	0	0	0	0%
20	சிறுவர்களை கொடூரமான முறையில் நடாத்தல்	76	74	2	97%	87	84	3	97%	83	82	1	99%
21	சிறுவர்களிடம் முறையற்ற வகையில் பாலியல் இன்பம் அனுபவித்தல்	26	25	1	96%	15	15	0	100%	25	25	0	100%
22	கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் வியாபாரத்தில் ஈடுபடல்	28	16	12	57%	32	30	2	94%	10	10	0	100%
23	ஆபத்தான ஆயுதக் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள்	110	109	1	99%	100	98	2	98%	169	165	4	98%
24	தன்னியக்கத் துப்பாக்கிகள் அல்லது ரிப்பீட்டர் துப்பாக்கிகளை தம்வசம் வைத்திருத்தல்	34	34	0	100%	22	21	1	95%	27	26	1	96%
25	ஹெரோயின், கொக்கேன், மோப்பீன் என்பவற்றை குறிப்பிட்ட அளவிலேனும் தயாரித்தல், விற்பனை செய்தல், இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல், ஹெரோயின் 2 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட, கொக்கேன் 02 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட மோப்பீன் 03 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட, ஒப்பியம் 500 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட, கஞ்சா 5 கிலோ கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட ஹஷீஸ் 1 கிலோ கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட, என்ற அளவுகளில் ஆபத்தான போதைப் பொருட்களை தம்வசம் வைத்திருத்தல்	6811	6789	22	100%	10959	10945	14	100%	8268	8204	64	99%
26	பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல்	89	88	1	99%	97	95	2	98%	170	167	3	98%
மொத்தம்		31098	24412	6686	79%	35412	28122	7290	79%	37152	28218	8934	76%

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

(**க.கொ**. இங்கு "தீர்க்கப்பட்ட" என்பதன் மூலம் பொலிஸால் ஆய்வுகளை முடிவுறுத்திய எண்ணிக்கை, நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள எண்ணிக்கை மற்றும் விசாரணை முடிவுறுத்திய எண்ணிக்கை என்ற வகையில் எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ளப்படுகிறது.)

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று ஆண்டுகளிலான காலப்பகுதியில் வன்கொடுமை தொடர்பான குற்றங்களில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வன்கொடுமை தொடர்பான குற்றங்கள் 633 தொடக்கம் 629 வரை அதாவது 1% என்ற வகையிலும், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 582 வரை அதாவது 85% என்ற வகையிலும் குறைவடைந்திருப்பினும், 2022 ஆம் ஆண்டில் 87% வரை சிறிய அளவில் அதிகரித்தலும் காணப்படுகிறது.

2020 ஆம் ஆண்டில் கடத்தல் தொடர்பாக 166 குற்றங்களும், 2021 ஆம் ஆண்டில் 172 குற்றங்களும் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் சிறிய அளவிலான அதிகரிப்புடன், 174 குற்றங்கள் பதிவாகியுள்ளன. அது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1% ஆன அதிகரிப்பாகும். 2021 ஆம் ஆண்டில் கடத்தல்கள் தொடர்பான குற்றங்களுக்கான தீர்வுகள் 90% ஆகும். குறித்த சதவீதம் 2022 ஆம் ஆண்டில் 89% வரை குறைவடைந்துள்ளது.

தீவைத்தல் அல்லது வெடிமருந்துப் பொருட்கள் தொடர்பான அனர்த்தங்கள் தொடர்பாக 338 குற்றங்கள் 2020 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் அத்தகைய குற்றங்கள் 361 வரை அதாவது 7% என்ற வகையில் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இத்தகைய குற்றங்கள் 509 வரை அதாவது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 41% என்ற வகையில் கவனித்தில் கொள்ளக்கூடியதாக அதிகரித்துள்ளமை அட்டவணைக்கமைவாக காணப்படுகிறது. தீர்வு வீதம் 2021 ஆம் ஆண்டில் 80% தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 78% வரை அதாவது ஓரளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

அட்டவணையின் தகவல்கள் படி ரூபா. 50000/- இற்கு மேற்பட்ட அனர்த்தங்களை ஏற்படுத்தும் வகையிலான குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் 265 பதிவாகியுள்ளதுடன், அதனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 532 வரை அதாவது 100% என்ற வகையிலான அதிகரிப்பைக் காணலாம். 2021 ஆம் ஆண்டில் இத்தகைய குற்றங்களின் தீர்வு வழங்கும் வீதம் 88% ஆவதுடன், 2022 ஆம் ஆண்டில் 81% வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

அட்டவணையின் பிரகாரம் அதிகமாக பதிவாகியுள்ள வீட்டுடைப்பு குற்றங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்கையில் 2020 ஆம் அண்டில் பதிவாகிய 6499 வீட்டுடைப்புகளுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் இத்தகைய குற்றங்கள் 6840 வரை அதாவது 5% என்ற வகையில் அதிகரித் துள்ளமை அவதானிக்கலாம். 2022 ஆம் ஆண்டில் பதிவாகிய எண்ணிக்கை 8645 என்ற வகையில் காணப்படுவதுடன், அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26% ஆன அதிகரிப்பாகும். தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 55% வரை காணப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டில் 56% ஆக பதிவாகியுள்ளது.

படுகாயம் ஏற்படுத்தல் தொடர்பான குற்றங்களை கவனத்தில் கொள்கையில் அட்டவணை பிரகாரம், 2021 ஆம் ஆண்டில் 854 குற்றங்கள் பதிவாகியுள்ளன. 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய 892 குற்றங்களைக் கவனத்தில் கொள்கையில் சிறிய அளவிலான வீழ்ச்சி காணப்படினும், 2022 ஆம் ஆண்டில் 923 குற்றங்கள் வரை அதாவது 8% என்ற வகையில் மீண்டும் அதிகரித்துள்ளது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இத்தகைய குற்றங்களின் தீர்வு சதவீதம் 95% ஆக மாற்றமடையாதுள்ளது.

ஆபத்தான ஆயுதங்களில் காயம் விளைவித்தல் தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் 1843 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், அத்தகைய குற்றங்கள் 2022 ஆம் ஆண்டில் 1888 வரை அதாவது 2% ஆல் அதிகரித்துள்ளது. இத்தகைய குற்றங்களில் 2021 ஆம் ஆண்டில் தீர்வு வீதம் 94% ஆவதுடன், 2022 ஆம் ஆண்டில் 93% ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை பிரகாரம், படுகொலைகள் தொடர்பான குற்றங்களை ஆய்வு செய்கையில் மூன்று ஆண்டுகளிலும் அதிகரிப்பைக் காணலாம். 2020 ஆம் ஆண்டில் 464 குற்றங்கள் பதிவாகியுள்ளன.

அத்தகைய குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் 521 வரை அதாவது 12% ஆல் அதிகரித்துள்ளன. 2022 ஆம் ஆண்டில் மனித படுகொலைகள் 559 குற்றங்கள் பதிவாகியதுடன், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7% ஆன அதிகரிப்பாகும். மனித படுகொலைகள் தொடர்பான தீர்வு வீதம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 95% ஆனதுடன், 2022 ஆம் ஆண்டில் 91% வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

அட்டவணை பிரகாரம், பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களை கவனத்தில் கொள்கையில் மூன்று பகுதிகளாக வகைப்படுத்தி தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி 16 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள், பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்துடன் மேற்கொள்கின்ற பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள், 16 வயதுக்கு குறைந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பமின்றி மேற்கொள்கின்ற பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள் என்று வகையீடு செய்யப்பட்டள்ளது. அதன்படி 16 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களை ஆராயும்போது, 2020 ஆம் ஆண்டில் இத்தகைய குற்றங்கள் 300 தொடக்கம் 2021 ஆம் ஆம் ஆண்டில் 256 வரை அதாவது 15% ஆல் குறைவடைந் துள்ளது. தீர்வு சதவீதம் தொடர்பாக கவனத்தில் கொள்கையில் 2020 ஆம் ஆண்டில் 94% ஆவதுடன், 2021 ஆம் ஆண்டில் தீர்வு சதவீதம் 96% வரை அதிகரித்துள்ளது. இந்த சதவீதம் 2022 ஆம் ஆண்டில் 92% வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்துடன் மேற்கொள்கின்ற 16 வயதுக்கு குறைந்த பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களில், அதாவது பெண்கள் தொடர்பான துஷ்பிரயோகங்களில் அதிகமாக பதிவாகியுள்ள குற்றங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்கையில் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்று ஆண்டுகளிலும் அதிகரித்துள்ளமை அவதானிக்கலாம். 2020 ஆம் ஆண்டில் அவ்வாறான 1292 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், அதனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் அத்தகைய குற்றங்களின் எண்ணிக்கை 1377 வரை அதாவது, 7% ஆல் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் அத்தகைய குற்றங்கள் 1391 வரை அதாவது 1% ஆல் மேலும் அதிகரித்துள்ளது. இந்த குற்றங்களில் தீர்வு சதவீதம் 2020 ஆம் ஆண்டில் 98% ஆவதுடன், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஒழுங்கு முறையில் 97% மற்றும் 96% என்ற வகையில் பதிவாகியுள்ளது.

16 வயதுக்கு குறைந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பமின்றி மேற்கொள்ளப்பட்ட பெண்கள் துஷ்பிர யோகங்கள் தொடர்பான குற்றங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று ஆண்டுகளிலும் ஒழுங்குமுறையில் குறைவடைந்துள்ளமை அவதானிக்கலாம். 2020 ஆம் ஆண்டில் இத்தகைய குற்றங்கள் 361 தொடக்கம் 2021 ஆம் ஆண்டில் 344 வரை அதாவது 5% வரையிலான குறைவடை தலும், 2022 ஆம் ஆண்டில் 338 வரை மீண்டும் அதாவது 2% வரை குறைவடைந்துள்ளமையும் அவதானிக்கலாம். இத்தகைய குற்றங்களில் தீர்வு சதவீதம் முறையாக அதிகரித்துள்ளதுடன், அதன் பிரகாரம் மூன்று ஆண்டுகளில் ஒழுங்குமுறையில் 92%, 93% மற்றும் 95% என்ற வகையில் அட்டவணையின் தரவுகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

அட்டவணைக்கு அமைவாக பாரிய குற்றங்கள் தொடர்பாக அதிகமான எண்ணிக்கையில் பதிவாகியுள்ள குற்றம் யாதெனில், கொள்ளைகயடித்தல் குற்றமாகும். தொடர்ச்சியாக அதிகரிக்கும் குற்றமாக 2020 ஆம் ஆணடில் இந்தக் குற்றங்கள் 2148 பதிவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் 2277 வரை அதாவது 6% ஆன அதிகரிப்பு காணப்படுகிறது. அதனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 3065 வரை 35% ஆன கவனத்தில் கொள்ளக் கூடிய வகையில் அதிகரித்து உள்ளது. கொள்ளையடித்தல் தொடர்பான குற்றங்களில் தீர்க்கும் சதவீதம் 2020 ஆம் ஆண்டில் 67% ம் 2021 ஆம் ஆண்டில் 68% ம் என்று பதிவாகியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் குறித்த வீதம் 95% வரை குறைவடைந்துள்ளது.

பாரிய பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களில் கீழ் வருகின்ற 677 குற்றங்கள் 2020 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதுடன், அதனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் அந்தக் குற்றங்கள் 649 வரை அதாவது 4% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் 571 வரை அதாவது 12% ஆல் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், தீர்வு வீதம் 2021 ஆம் ஆண்டில் 96% தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 95% வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

அட்டவணைக்கு அமைவாக ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட குற்றவியல் ரீதியிலான முறைகேடான துஷ்பிரயோகம், நம்பிக்கை மீறல் தொடர்பான குற்றங்களின் கீழ் வருகின்ற குற்றங்களை நோக்குகையில், கவனத்தில் கொள்ள வேண்டிய அளவில் பொலிஸிடம் பதிவாகியுள்ளன. 2020 ஆம் ஆண்டில் இவ்வாறான குற்றங்கள் 2891 பதிவாகியுள்ளதுடன், அத்தகைய குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் 2207 வரை அதாவது 24% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தக் குற்றங்களில் தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 44% தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் தீர்வு காணும் சதவீதம் 50% வரை மேலும் வளர்ச்சியடைந்துள்ளது.

அட்டவணையின் தகவல்கள் படி ரூபா. 50000/-இற்கு அதிகமான மாடுகளை திருடுதல் தொடர்பான குற்றங்களை கவனத்தில் கொள்கையில் சில ஏற்றத்தாழ்வுகள் அட்டவணையில் காணப்படும் 03 ஆண்டுகளிலான காலப்பகுதியில் காணக்கூடியதாக உள்ளன. 2020 ஆம் ஆண்டில் 524 மாடுகளைக் களவாடுதல் பதிவாகியுள்ளதுடன், அத்தகைய குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் 365 வரை அதாவது 30% வரை குறைவடைந்துள்ளன. 2022 ஆம் ஆண்டில் மீண்டும் இத்தகைய குற்றங்கள் 726 வரை அதாவது 99% ஆல் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 82% ம், 2022 ஆம் ஆண்டில் 76 ம் என்ற வகையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணையின் தரவுகளின் படி ரூபா. 50000/- இற்கு அதிகமான சொத்துக்களை திருடுதல் தொடர்பான குற்றங்களை கவனத்தில் கொள்கையில் 2020 ஆம் ஆண்டில் 4073 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், அத்தகைய குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் 4801 வரை அதாவது 18% ஆல் அதிகரித்துள்ளன. 2022 ஆம் ஆண்டிலும் இத்தகைய சொத்துக்களை திருடுதல் குற்றங்கள் மேலும் 5404 வரை அதாவது 13% ஆல் அதிகரித்துள்ளது. இத்தகைய குற்றங்களின் தீர்வு வீதம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 66% என்ற வகையில் மாற்றங்கள் இல்லாது காண்பிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை கொடூரமான முறையில் நடாத்தல் தொடர்பாக கவனித்தில் கொள்கையில் அட்டவணை பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் 76 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 87 வரை அதாவது 14% ஆன அதிகரிப்பு காணப்படுகிறது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள குற்றங்களின் எண்ணிக்கை 83 ஆகும். அதாவது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5% ஆன வீழ்ச்சியாகும். தீர்வு வீதம் 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் 97% ஆயினும், 2022 ஆம் ஆண்டில் 99% என்ற வகையில் காணப்படுகிறது.

அட்டவணைப் பிரகாரம் கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் வியாபாரத்தில் 32 குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் குறித்த எண்ணிக்கை 10 வரை அதாவது 69% ஆன வீழ்ச்சியடைதலை அடையாளம் காணலாம். 2021 ஆம் ஆண்டில் தீர்வு வீதம் 94% ம், 2022 ஆம் ஆண்டில் 100% ம் என்ற வகையில் இரண்டு ஆண்டுகளிலும் உயர் மட்டத்தில் காணப்படுகிறது.

தொடர்ச்சியாக அதிகரிக்கின்ற குற்றமாக கவனத்தில் கொள்கின்ற போதைப்பொருள் தொடர்பான குற்றங்களைக் கவனத்தில் கொள்கையில் அட்டவணைக்கமைவாக 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் கவனத்தில் கொள்ள வேண்டிய அளவிலான அதிகரிப்பை அடையளாம் காணலாம். அதன்படி 2020 ஆம் ஆண்டில் 6811 எண்ணிக்கையிலான போதைப் பொருள் தொடர்பான குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் அது 10959 வரை அதாவது 61% வரையிலான அதிகரிப்பு காணலாம்.

ஆயினும், 2022 ஆம் ஆண்டில் இந்த போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் பதிவாகுவதில் வீழ்ச்சி காணப்படுகிறது. அதன்படி பதிவாகிய எண்ணிக்கை 8268 ஆகும். அதாவது 25% ஆன குறைவடைதலாகும். மூன்று ஆண்டுகளிலும் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்கான தீர்வு வழங்கும் சதவீதம் 99% ஐ விஞ்சியுள்ளது.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஒட்டுமொத்தமாக வன்குற்றங்கள் தொடர்பாக தரவுகளை ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய குற்றங்கள் 31098 உடன்ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் 35412 வரை அதாவது 14% ஆன அதிகரிப்பும், 2022 ஆம் ஆண்டில் 37152 வரை மேலும் 5% ஆன அதிகரிப்பும் காணப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த வன்குற்றங்கள் பதிவாகிய சதவீதம் 76% ஆன ஆகும்.

♦ பெண்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள்

பின்வரும் அட்டவணையில் கடந்த மூன்று ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள் தொடர்பான பதிவுகள் ஒப்பீட்டளவில் காட்டப்பட்டுள்ளது. அதன்மூலம் 2019 மற்றும் 2020 ஆகிய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் பெண்களுக்கெதிரான குற்றங்கள் பதிவாதல் மற்றும் குற்றங்களுக்கான தீர்வுகள் தொடர்பான முன்னேற்றத்தை அடையாளம் காணலாம்.

பெண்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற பாரிய குற்றங்களின் அட்டவணை

அட்டவணை இலக்கம் - 04

	குற்றங்கள்	2020				2021				2022			
		பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்
1	கொலை	82	25	57	30%	79	24	55	30%	102	98	4	96%
2	தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திக் கொள்ள உடந்தையாக இருத்தல்	3	2	1	67%	0	0	0	0%	0	0	0	0%
3	மனிதக் கொலைக்கு முயற்சித்தல்	10	2	8	20%	12	1	11	8%	11	11	0	100%
4	கற்பழிப்பு	237	98	139	41%	187	82	105	44%	182	177	5	97%
5	துர்நடத்தை	7	0	7	0%	7	1	6	14%	3	3	0	100%
6	படுகாயம் ஏற்படுத்தல்	174	64	110	37%	121	51	70	42%	154	154	0	100%
7	கத்தி போன்றவற்றால் காயம் ஏற்படுத்தல்	0	0	0	0%	73	18	55	25%	74	74	0	100%
8	இயற்கைக்கு முரணான குற்றங்கள்/ நபர்களுக்கிடையில் ஒழுங்கு முறையற்ற செயற்பாடுகள்	5	2	3	40%	3	2	1	67%	1	1	0	100%
9	பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகங்கள்	15	5	10	33%	24	11	13	46%	21	21	0	100%
10	வன்கொடுமை	1	0	1	0%	3	1	2	33%	1	1	0	100%
11	கடத்தல்	38	13	25	34%	49	18	31	37%	43	43	0	100%
12	பாலியல் இச்சைகளுக்காக பெண்களை விநியோகித்தல்	6	3	3	50%	1	0	1	0%	1	1	0	100%
13	நபர்களுக்கிடையிலான மோசமான நடத்தை	0	0	0	0%	3	1	2	33%	2	2	0	100%
14	வேறு	17	5		29%	6	3	3	50%	5	5	0	100%
	மொத்தம்	595	219	364	37%	568	213	355	38%	600	591	9	99%

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

(**க.கொ.** இங்கு "தீர்க்கப்பட்ட" என்பதன் மூலம் பொலிஸால் ஆய்வுகளை முடிவுறுத்திய எண்ணிக்கை, நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள எண்ணிக்கை மற்றும் நீதிமன்றத்தால் விசாரணை முடிவுறுத்திய எண்ணிக்கை என்ற வகையில் எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் "தீர்க்கப்பட்ட என்பதில்" தற்போது ஆய்வு செய்கின்ற போதிலும், பொலிஸால் சந்தேக நபராக கைது செய்தலும் அடங்குகின்றது.)

அட்டவணைக்கமைவாக கவனத்தில் கொள்கையில் பெண்களுக்கெதிரான மனித படுகொலைகள் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளமை அயைடளாம் காணலாம். அதன்படி 2021 ஆம் ஆண்டில் பதிவாகிய 79 குற்றங்களுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் அண்டில் இந்த படுகொலைகள் 102 வரை அதாவது 29% ஆல் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் தீர்க்கும் சதவீதம் 30% ஆல் வீழ்ச்சியடைந்திருப்பினும், 2022 ஆம் ஆண்டில் 96% வரை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

அட்டவணையின் தரவுகளுக்கமைவாக கொலை செய்வதற்கு முயற்சித்தல் தொடர்பான 12 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 11 வரை அதாவது 8% ஆல் 2022 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளது. 8% ஆக நிலவிய 2021 ஆம் ஆண்டின் தீரவு சதவீதம் 2022 ஆம் ஆண்டில் 100% வரை மேலும் அதிகரித்துள்ளமை அவதானிக்கலாம்.

பெண்களுக்கெதிரான கொடூரமான குற்றமாகிய பெண்களை துஷ்பிரயோகப்படுத்தல் தொடர்பான குற்றங்கள் அட்டவணைக்கமைவாக மூன்று ஆண்டுகளிலும் குறைவடைந்துள்ளமை அவதானிக்கலாம். 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய எண்ணிக்கை 237 ஆகும். குறித்த எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டில் 187 வரை அதாவது 21% ஆல் குறைவடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் பெண்களை துஷ்பிரயோகப்படுத்தும் எண்ணிக்கை 182 ஆவதுடன், அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3% ஆல் மேலும் குறைவடைந்துள்ளது. அட்டவணைக்கமைவாக பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களில் தீர்க்கும் சதவீதம் 44% ஆகியதுடன், 2022 ஆம் ஆண்டில் 97% வரை கவனிக்கத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது.

அட்டவணக்கமைவாக பெண்களுக்கெதிராக படுகாயம் ஏற்படுத்தல் தொடர்பான குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் 121, மற்றும் 2022 ஆம் ஆண்டில் 154 பதிவாகியுள்ளது. அதன்படி 2022 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் பதிவாகுதலானது, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27% ஆன அதிகரிப்பாகும். அட்டவணைக்கமைவாக இந்தக் குற்றங்கள் 2021 ஆம் அண்டில் 42% ஆன தீர்க்கும் சதவீதம் 2022 ஆம் ஆண்டில் 100% வரை வளர்ச்சியடைந்துள்ளது.

கொடூரமான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள் பற்றி கவனம் செலுத்துகையில், பெண்களுக்கெதிராக இவ்வாறான 24 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் அது 21 வரை அதாவது 13% ஆல் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், இந்தக் குற்றங்களில் தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 46 % தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 100% வரை அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காணலாம்.

அட்டவணைக்கமைவாக 2021 ஆம் ஆண்டில் பெண்களுக்கெதிரான கடத்தல் தொடர்பான குற்றங்களை கவனத்தில் கொள்கையில் 43 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், அது 2021 ஆம் ஆண்டில் பதிவாகிய 49 குற்றங்களுடன் ஒப்பிடுகையில் 12% ஆன வீழ்ச்சியடைதலாகும். இந்த கடத்தல் தொடர்பான குற்றங்களில் தீர்க்கும் சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 37%ஆனதுடன், 2022 ஆம் ஆண்டில் அது 100%வரை அதிகரித்துள்ளது.

பெண்களுக்கெதிரான பாரிய குற்றங்கள் தொடர்பாக அட்டவணையின் தரவுகளை கவனத்தில் கொள்கையில் 2021 ஆம் ஆண்டில் பதிவாகிய மொத்த குற்றங்கள் 568 உடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் மொத்த குற்றங்களின் எண்ணிக்கை 600 வரை அதாவது 6% ஆன அதிகரிப்பு காணப்படுகிறது. அவ்வாறாயினும், அட்டவணைக்கமைவாக 2021 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த பெண்களுக்கெதிரான பாரிய குற்றங்களின் தீர்வு சதவீதம் 38% ஆக காண்பிக்கப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டில் குறித்த சதவீதம் 99% வரை பாரிய அளவில் அதிகரித்தள்ளமை காணலாம்.

♦ சிறுவர்களுக்கெதிரான பாரிய குற்றங்கள்

சிறுவர்களுக்கெதிரான பாரிய குற்றங்கள் 15 வகுதிகளின் கீழ் அட்டவணை மூலம் காட்டப் பட்டுள்ளது. அதன் மூலம் கடந்த 2020, 2021 மற்றும் 2022 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக அந்தக் குற்றங்களை பதிவு செய்தல் மற்றும் தீர்வு வழங்குதல் தொடர்பாக ஒப்பீட்டு அளவிலான முன்னேற்றம்,அட்டவணை இலக்கம் 05 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கெதிராக மேற்கொள்கின்ற பாரிய குற்றங்களின் அட்டவணை

அட்டவணை இலக்கம் - 05

குற்றங்கள்			2020				2021				2022			
			பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்
1	கொலை		22	6	16	27%	27	8	19	30%	18	18	0	100%
2	தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திக் கொள்ள		0	0	0	0%	0	0	0	0%	0	0	0	0%
3	கொலை செய்வதற்கு முயற்சித்தல்		9	0	9	0%	9	3	6	33%	13	13	0	100%
4	கற்பழிப்பு	16 வயதிற்குக் கீழ் சம்மதத்துடன்	1292	493	799	38%	1376	610	766	44%	1369	1366	3	100%
		16 வயதிற்குக் கீழ் சம்மதமின்றி	315	74	241	23%	281	122	159	43%	324	322	2	99%
		16 – 18 வயதிற்கு இடைப்பட்ட	51	13	38	25%	50	24	26	48%	54	54	0	100%
5			50	22	28	44%	73	34	39	47%	54	54	0	100%
6	படுகாயம்		32	5	27	16%	24	4	20	17%	34	34	0	100%
7	கத்தி போன்றவற்றால் காயம் ஏற்படுத்தல்		0	0	0	0%	0	0	0	0%	7	7	0	100%
8	இயற்கைக்கு மாறான தவறுகள்- தனிமனிதர்களுக்கிடையில் கடும் அநாகரிக		10	5	5	50%	6	3	3	50%	3	3	0	100%
9	பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகங்கள்		615	267	348	43%	580	252	328	43%	535	535	0	100%
10	கூட்டிவிடுதல்		632	233	399	37%	611	184	427	30%	575	568	7	99%
11	கடத்தல்		17	1	16	6%	20	5	15	25%	30	30	0	100%
12	ஆட்கடத்தல் வியாபாரம்		10		10	0%	24	23	1	96%	5	5	0	100%
13	சிறுவர்களை கொடூரமாக நடாத்தல்		76	33	43	43%	87	33	54	38%	83	82	1	99%
14	முறையற்ற பாலியல் இன்பம் அனுபவித்தல்		27	4	23	15%	15	2	13	13%	11	11	0	100%
15	ஏனைய		4	2	2	50%	0	0	0	0%	1	1	0	100%
மொத்தம்			3162	1158	2004	37%	3183	1307	1876	41%	3116	3103	13	100%

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

(**க.கொ.** இங்கு "தீர்க்கப்பட்ட" என்பதன் மூலம் பொலிஸால் ஆய்வுகளை முடிவுறுத்திய எண்ணிக்கை, நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள எண்ணிக்கை மற்றும் நீதிமன்றத்தால் விசாரணை முடிவுறுத்திய எண்ணிக்கை என்ற வகையில் எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில்தீர்க்கப்படுதல் என்பதில் தற்போது ஆய்வில் உள்ள போதும், பொலிஸால் சந்தேக நபராக கைது செய்தலும் அடங்குகின்றது.)

அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளை ஆய்வு செய்கையில் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கெதிரான மனித படுகொலை தொடர்பான குற்றங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமை காணக்கூடியதாக உள்ளது. அதன்படி 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்ட இவ்வாறான 27 குற்றங்களுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 18 குற்றங்கள் வரை அதாவது 33% ஆல் குறைவடைந்துள்ளது. இந்த சிறுவர்களுக்கெதிரான படுகொலை தொடர்பான குற்றங்களில் தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 30% ஆனதுடன், 2022 ஆம் ஆண்டில் 100% வரையிலான வளர்ச்சியைக் காணலாம்.

சிறுவர்களுக்கெதிரான குற்றங்களுக்கிடையில் மிக பாரிய குற்றத் தொகுதியான பெண்களை துஷ்பிரயோகப்படுத்தல் தொடர்பான குற்றம் மூன்று வகுதிகளாக வகைப்படுத்தப்பட்டு அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது. அதாவது வயது 16 இற்கு குறைந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்துடன் கூடிய பெண்கள் துஷ்பிரயோகம், 16 வயதுக்கு குறைந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பமற்ற பெண்கள் துஷ்பிரயோகம் மற்றும் வயது 16 – 18 இற்கு இடைப்பட்ட பெண்கள் துஷ்பிரயோகம் என்பனவாகும்.

அட்டவணைப் படி சிறுவர்களுக்கெதிராக பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களுக்கிடையில் 16 வயதுக்கு குறைந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்துடன் கூடிய பெண்கள் துஷ்பிரயொகம் அதிகமாக பதிவாகியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் இந்த குற்றங்கள் 1292 பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கையில் 7%ஆன வளர்ச்சியுடன் 2021 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கெதிரான பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பாக 1376 குற்றங்கள் பதிவாகியுள்ளன. 2022 ஆம் ஆண்டில் 1369 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், அது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1% ஆன வீழ்ச்சி யடைதலாகும்.

பாதிக்கப்பட்டவரின் விருப்பமின்றி 16 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கெதிரான பெண்கள் துஷ்பிரயோகங்கள் தொடர்பான குற்றங்களில் அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அயைடளாம் காணலாம் அதன்படி 2021 ஆம் ஆண்டில் 281 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 324 வரை அதாவது 15% ஆல் அதிகரித்துள்ளது. இந்த குற்றங்கள் தீர்க்கும் சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 43% ஆவதுடன், 2022 ஆம் ஆண்டில் 99% ஆன வளர்ச்சி அட்டவணை பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கெதிரான பாரிய காயங்கள் ஏற்படுத்தும் குற்றங்களை நோக்கும் போது, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு காணப்படுகிறது. அதன்படி 2021 ஆம் ஆண்டில் 24 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 34 வரை அதாவது 42% வரை அதிகரித்துள்ளது. இந்த குற்றங்களின் தீர்க்கும் வீதம் 2021 ஆம் ஆண்டில் 43% ஆவதுடன், 2022 ஆம் ஆண்டில் 99% ஆன வளர்ச்சி அட்டவணைக்கமைவாக அடையாளம் காணலாம்.

சிறுவர்களுக்கெதிரான படுகாயம் ஏற்படுத்தல் தொடர்பான குற்றங்களை கவனத்தில் கொள்கையில் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதகிரிப்பு காணப்படுகிறது. அதன்படி 2021 ஆம் ஆண்டில் 24 குற்றங்கள் பதிவாகியதுடன், 2022 ஆம் ஆண்டில் அந்தக் குற்றங்களின் எண்ணிக்கை 34 வரை அதாவது 42% வரை அதிகரித்துள்ளது. இந்தக் குற்றங்களில் தீர்க்கும் வீதம் 2021 ஆம் ஆண்டில் 17% ஆவதுடன், 2022 ஆம் ஆண்டில் 100% வரையிலான அதிகரிப்பு காணப்படுகிறது.

கொடூர பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விடத்து, சிறுவர்களுக்கெதிரான இந்தக் குற்றங்கள் சிறிய அளவில் குறைவடைந்திருப்பதை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் அடையாளம் காணலாம். அதன்படி 2020 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் 615 பதிவாகியுள்ளதுடன், அது 2021 ஆம் ஆண்டில் 580 வரை அதாவது 6% ஆல் குறைவடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் பதிவாதல் 535 ஆக காண்பிக்கப்படுவதுடன், அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% ஆன குறைவடைதலாகும். இந்தக் குற்றங்களில் தீர்வு சதவீதம் 2022 ஆம் ஆண்டில் 100% என்பதை அவதானிக்கலாம்.

சிறுவர்களுக்கெதிரான பாரிய குற்றங்களின் கீழ் வருகின்ற துஷ்பிரயோகம் என்ற குற்றம் 2020 ஆம் ஆண்டில் 632 பதிவாகியுள்ளதுடன், அது 2021 ஆம் ஆண்டில் 611 ஆக பதிவாகியுள்ளது. அதாவது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3% ஆன வீழ்ச்சியாகும். 2022 ஆம் ஆண்டில் 575 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6% ஆன வீழ்ச்சியடைதலாகும். தீர்வு சதவீதம் 2022 ஆம் ஆண்டில் 99% ஆக குறிப்பிடப்படுகிறது.

கடத்தல் தொடர்பாக 17 குற்றங்கள் 2020 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் அந்தக் குற்றங்கள் 18% ஆல் அதிகரித்துள்ளது. அதேபோன்று 2022 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கெதிராக கடத்தல் தொடர்பாக 30 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50% ஆன அதிகரிப்பை அடையாளம் காணலாம். தீர்வு வீதம் 2022 ஆம் ஆண்டில் 100% ஆக குறிப்பிடப்படுகிறது.

சிறுவர்களுக்கெதிராக ஆட்களை வியாபாரம் செய்தல் என்ற குற்றங்களை கவனத்தில் கொள்கையில், 2021 ஆம் ஆண்டில் 24 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் அண்டில் பதிவாகிய குற்றங்களின் எண்ணிக்கை 05 ஆகும். அது சதவீதமாக 76% ஆன குறைவடைதலாக குறிப்பிடலாம். மேலும், தீர்வு சதவீதம் 2022 ஆம் ஆண்டில் அட்டவணைக்கமைவாக 100% வரையில் காணப்படுகிறது.

அட்டவணைக்கமைவாக சிறுவர்களை கொடூரமாக கவனித்தல் தொடர்பாக 87 குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் பதிவாகிய எண்ணிக்கை 83 ஆகும். அது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5% ஆன குறைவடைதலாகும். தீர்வு வீதம் 99% ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கெதிரான முறையற்ற பாலியல் இன்பம் அனுபவித்தல் என்ற குற்றங்களில் குறைவடைதல் அட்டவணை படி காணப்படினும், 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய 27 குற்றங்களுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் 15 வரை அதாவது 44% வரையில் குறைவடைதல் காணப்படுகிறது. அதேபோன்று 2022 ஆம் ஆண்டில் 11 குற்றங்கள் பதவாகியுள்ளதுடன், அதற்கு முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27% ஆன வீழ்ச்சியடைதலாகும். சிறுவர்களுக்கெதிராக முறையற்ற வகையில் பாலியல் இன்பம் அனுபவித்தல் என்ற குற்றங்களின் தீர்வு வீதம் 2022 ஆம் ஆண்டில் 100% வீதமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கெதிரான முழுமொத்த பாரிய குற்றங்களின் பதிவு தொடர்பாக கவனத்தில் கொள்கையில் சிறிய அளவில் அதிகரித்திருப்பதை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்ற ஆண்டு காலப் பகுதிக்கமைவாக அடையாளம் காணலாம். 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய ஒட்டுமொத்த குற்றங்களின் எண்ணிக்கை 3162 ஆகும்போது, 2021 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 3183 வரை அதாவது 1% ஆல் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் பதிவாகிய சிறுவர்களுக்கெதிரான பாரிய குற்றங்களின் எண்ணிக்கை 3116 ஆவதுடன், அது வீதமாக 2% ஆன அதிகரிப்பாகும். ஒட்டு மொத்தமாக குற்றங்களை தீர்க்கும் வீதம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டள்ள வகையில் 100% ஆகும்.

2.1.2 சிறு குற்றங்கள்

இலங்கை பொலிஸிடம் பதிவாகின்ற குற்றங்களுக்கிடையில் பாரியதல்லாத குற்றங்கள் சிறு குற்றங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. சில இடங்களில் சிறு குற்றங்களாக குறிப்பிடுகின்ற இந்தக் குற்றங்கள் ஆட்களுக்கெதிரான சிறு குற்றங்கள் மற்றும் சொத்துக்களுக்கெதிரான சிறு குற்றங்களாக என்ற வயில் வகைப்படுத்தி காண்பிக்கப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணை மூலம் சிறுகுற்றங்கள் ஒவ்வொரு தொகுதிகளின்கீழ் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

- **ஆட்களுக்கெதிரான சிறிய குற்றங்கள்**

ஆட்களுக்கெதிரான சிறிய குற்றங்களை 14 தொகுதிகளின் கீழ் பின்வரும் அட்டவணை மூலம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், சிறிய அளவிலான தாக்குதல்கள் 2021 ஆம் ஆண்டில் 19186 என்ற எண்ணிக்கையில் பதிவாகியுள்ளது. அதனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் சிறிய அளவிலான தாக்குதல்கள் 22164 வரை அதாவது 15% ஆல் அதிகரித்துள்ளது. தீர்வு வீதம் 2021 ஆம் ஆண்டில் 56% தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 60% வரை அதிகரித்துள்ளது.

ஆட்களுக்கெதிரான சிறிய குற்றங்கள் அட்டவணை

அட்டவணை இலக்கம் - 06

குற்றங்கள்		2020				2021				2022			
		பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்
1	சிறிய தாக்குதல்கள்	**20641**	**11595**	**9046**	**56%**	**19186**	**11074**	**8112**	**58%**	**22164**	**13361**	**8803**	**60%**
2	சட்டவிரோத கருக்கலைப்புகள்	**34**	**15**	**19**	**44%**	**48**	**30**	**18**	**63%**	**65**	**30**	**35**	**46%**
3	குற்றவியல் அத்துமீறி நுழைதல்/ வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல்	**1702**	**890**	**812**	**52%**	**1820**	**964**	**856**	**53%**	**1740**	**991**	**749**	**57%**
4	பாலியல் துஷ்பிரயோகம்	**3397**	**1838**	**1559**	**54%**	**3249**	**1731**	**1518**	**53%**	**2986**	**1746**	**1240**	**58%**
5	முறையற்ற தடை/ முறையற்ற தடுப்பு	**142**	**99**	**43**	**70%**	**191**	**131**	**60**	**69%**	**217**	**115**	**102**	**53%**
6	சட்ட விரோதமான நடவடிக்கைகளின் பொருட்டு ஏதேனும் கட்டிடம் என்பவற்றில் இருந்து பிடிபடுதல்	**4**	**0**	**4**	**0%**	**15**	**10**	**5**	**67%**	**56**	**18**	**38**	**32%**
7	பிரசித்திபெற்ற திருடனாக திரிதல்	**60**	**20**	**40**	**33%**	**64**	**18**	**46**	**28%**	**19**	**17**	**2**	**89%**
8	பொது இடத்தில் கலவரம் செய்தல்	**204**	**166**	**38**	**81%**	**168**	**124**	**44**	**74%**	**281**	**219**	**62**	**78%**
9	குற்றவியல் வற்புறுத்தல், குற்றவியல் மிரட்டல், வேண்டுமென்றே அவமானப் படுத்தல்	**1987**	**1041**	**946**	**52%**	**2095**	**1050**	**1045**	**50%**	**2583**	**1649**	**934**	**64%**
10	ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் சட்டப்பூர்வ கட்டளைக்கு கீழ்படியா திருத்தல் என்ற வகையில் வருகை தராதிருத்தல்	**239**	**144**	**95**	**60%**	**221**	**124**	**97**	**56%**	**252**	**200**	**52**	**79%**
11	எந்தவொரு வகையிலுமான ஒரு காயத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தல்	**700**	**526**	**174**	**75%**	**610**	**460**	**150**	**75%**	**727**	**557**	**170**	**77%**
12	உடல் பிணைக்கு விண்ணப்பித்தல்	**1819**	**1700**	**119**	**93%**	**2066**	**1822**	**244**	**88%**	**1368**	**1183**	**185**	**86%**
13	நீதிமன்றத்தில் பொய்யான சாட்சிகளை வழங்குதல் அல்லது உருவாக்குதல்	**421**	**254**	**167**	**60%**	**691**	**143**	**548**	**21%**	**97**	**67**	**30**	**69%**
14	இ.கு.த.ச.கே.கீழ் மேற்கொண்ட ஏனைய சிறிய குற்றங்கள்	**30782**	**22848**	**7934**	**74%**	**44497**	**30910**	**13587**	**69%**	**10669**	**6014**	**4655**	**56%**
மொத்தம்		**62132**	**41136**	**20996**	**66%**	**74921**	**48591**	**26330**	**65%**	**43224**	**26167**	**17057**	**61%**

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

(க.கொ. இங்கு "தீர்க்கப்பட்ட" என்பதன் மூலம் வழக்கு தொடரப்பட்ட எண்ணிக்கை அதாவது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள எண்ணிக்கை, வேறு வகையில் முடிவுறுத்திய எண்ணிக்கை, குற்றவாளிகளின் எண்ணிக்கை, விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை என்ற வகையில் எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

மேற்படி அட்டவணை பிரகாரம் சட்ட விரோதமான கருக்கலைப்புகளில் முறையான அதிகரிப்பு கடந்த மூன்று ஆண்டுகளில் காணப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய இந்த குற்றங்களின் எண்ணிக்கை 34 ஆவதுடன், 2021 ஆம் ஆண்டில் 48 வரை அதாவது 41% வரை அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் சட்ட விரோதமாக 65 கருக்கலைப்புகள் அதாவது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 35% ஆல் முறையாக அதிகரித்துள்ளது. தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 63% தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 46% வரை குறைவடைந்துள்ளது.

குற்றவியல் அத்துமீறி நுழைதல் தொடர்பாக கவனத்தில் கொள்கையில் 1820 குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் 1740 வரை 4% ஆல் குறை வடைந்துள்ளது. தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 53% என்ற வகையிலும், 2022 ஆம் ஆண்டில் 57% வரையும் அதிகரித்துள்ளது.

நபர்களுக்கெதிரான சிறு குற்றங்களில் அதிகமாக பதிவாகும் குற்றமாக பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றத்தைக் குறிப்பிடலாம். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின்படி 2021 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் 3249 வரை பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம்ஆண்டில் பதிவாகிய 2986 என்ற குற்றங்களுடன் ஒப்பிடுகையில் 8% ஆக குறைவடைந்துள்ளது. தீர்வு சதவீதம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஒழுங்குமுறையில் 54% மற்றும் 58% அக குறிப்பிடப்படுகிறது.

குற்றவியல் வற்புறுத்தல்/மிரட்டல் என்ற தொகுதிக்குரிய 2095 குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் பதிவாகியதுடன், 2022 ஆம் ஆண்டில் 2583 குற்றங்கள் வரை அதாவது 23% ஆல் அதிகரித்துள்ளது. தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 56% தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 79% வரை கவனிக்கத் தக்க அளவில் அதிகரித்துள்ளது.

அட்டவணைக்கமைவாக உடல் பிணைக்கானவேண்டுகோளுக்கமைவாக 2021 ஆம் ஆண்டில் 2066 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 1368 வரை 34% ஆல் குறைவடைந்துள்ளது.

நீதிமன்றத்தில் பொய்யான சாட்சிகள் வழங்கும 691 குற்றங்கள் 2021 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் இந்தக் குற்றங்கள் 97 வரை அதாவது 86% ஆல் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் பொய்யான சாட்சிகள் வழங்கும் குற்றங்களின் தீர்வு சதவீதம் 21% ஆனதுடன், 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 69% வரை கவனிக்கத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக நபர்களுக்கெதிரான சிறு குற்றங்கள் பதிவாதல் தொடர்பான அட்டவணைக்கமைவாக 2021 ஆம் ஆண்டில் பதிவாகிய ஒட்டுமொத்த நபர்களுக்கெதிராக 74921 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், அதனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 43224 வரை அதாவது 42% ஆல் குறைவடைந் துள்ளது. இந்த ஒட்டுமொத்த நபர்களுக்கெதிரான சிறு குற்றங்களை தீர்க்கும் சதவீதம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஒழுங்குமுறையில் 65% மற்றும் 61% என்ற மட்டத்தில் பதிவாகியுள்ளது.

♦ பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான சிறு குற்றங்கள்

இலங்கை பொலிஸிடம் பதிவாகியுள்ள நபர்களுக்கெதிரான சிறிய குற்றங்களை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தும் பொருட்டு பெண்களுக்கெதிரான சிறிய குற்றங்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான சிறிய குற்றங்கள் என்ற வகையில் மேலும் வகைப்படுத்தப்படுகிறது. அதன்போது பெண்களுக் கெதிரான சிறிய குற்றங்கள் 15 வகைப்படுத்தலின்கீழும், சிறுவர்களுக்கெதிரான சிறிய குற்றங்கள் 14 வகைப்படுத்தலின்கீழும் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கெதிரான சிறு குற்றங்கள்

அட்டவணை இலக்கம் - 07

குற்றத்தின் இயல்பு		2020				2021				2022			
		பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்
1	பாலியல் துன்புறுத்தல்கள்	2495	2425	70	97%	2323	2254	69	97%	2024	1930	94	95%
2	சில குற்றங்களுக்கு ஏற்புடையதாக விடயங்களை முன்வைத்தல் 1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 365 இ(1)(2)(அ)(ஆ)(ஈ)	5	5	0	100%	0	0	0	0%	1	1	0	100%
3	கவனமின்றி மரணம் ஏற்படுத்தல்	0	0	0	0%	2	2	0	100%	2	2	0	100%
5	சட்டபூர்வமாக திருமணம் நடந்துவிட்டது என்ற நம்பிக்கையை மோசடியான முறையில் உருவாக்கி குடும்ப வாழ்வில் ஈடுபடுதல்	1	1	0	100%	0	0	0	0%	0	0	0	0%
6	பலதார திருமணம் மேற்கொள்ளுதல்	4	4	0	100%	6	6	0	100%	12	12	0	100%
7	சிறுய காயங்களை ஏற்படுத்தல்	3541	3531	10	100%	3178	3172	6	100%	3144	3134	10	100%
8	சட்டவிரோதமாக தடுத்தல் மற்றும் முறையற்ற வகையில் சிறை வைத்தல்	14	14	0	100%	14	13	1	93%	4	4	0	100%
9	வன்முறைகள் அல்லது குற்றவியல் வற்புறுத்தல்கள்	16	16	0	100%	23	23	0	100%	25	19	6	76%
10	குற்றவியல் மிரட்டல்	207	201	6	97%	188	182	6	97%	157	155	2	99%
11	ஆத்திரமூட்டல் வகையில் மேற்கொள்ளும் எந்தவொரு வகையிலுமான அவமானங்கள்	1	1	0	100%	0	0	0	0%	1	1	0	100%
12	சண்டை போடுதல்	0	0	0	0%	1	1	0	100%	1	1	0	100%
13	பாலியல் பலாத்கார முயற்சி	31	31	0	100%	45	45	0	100%	16	16	0	100%
14	குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழான குற்றங்கள்	575	575	0	100%	534	534	0	100%	820	820	0	100%
15	ஏனைய	120	119	1	99%	158	156	2	99%	119	118	1	99%
	மொத்தம்	**7010**	**6923**	**87**	**99%**	**6472**	**6388**	**84**	**99%**	**6326**	**6213**	**113**	**98%**

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

அட்டவணைக்கமைவாக பெண்களுக்கெதிரான சிறிய குற்றங்களில் அதிகமாக பதிவாகும் குற்றமாக பாலியல் துன்புறுத்தல் தொடர்பான குற்றங்களை குறிப்பிடலாம். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக கவனத்தில் கொள்கையில் இந்த குற்றங்களில் குறைவடைதலை அடையாளம் காணலாம். 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் குற்றங்கள் 2495 தொடக்கம் 2323 வரை 7% ஆல் குறைவடைந்துள்ளமை காணலாம் என்பதுடன், 2021 ஆம் அண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் பாலியர் துன்புறுத்தல் தொடர்பான சிறிய குற்றங்கள் 13% வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

பெண்களுக்கெதிரான சிறிய குற்றங்களில் அதிகமாக பதிவாகும் குற்றமாக சிறிய காயங்கள் ஏற்படுத்தலை குறிப்பிடலாம். இந்த குற்றங்களிலும் ஏதேனும் குறைவடைதல் அட்டவணைக் கமைவாக அடையாளம் காணலாம். அதன்படி 2020 ஆம் ஆண்டில் 3541 குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் 3178 வரை அதாவது 10% ஆன வீழ்ச்சியடைதலும், 2022 ஆம் ஆண்டில் 3144 வரை அதாவது 1% வரையிலான குறைவடைதலும் அட்டவணைக் கமைவாக அடையாளம் காணலாம்.

அட்டவணைக்கமைவாக குற்றவியல் மிரட்டல் தொடர்பான சிறு குற்றங்கள் குறைவடைந் துள்ளமையை அவதானிக்கலாம். 2020 ஆம் ஆண்டில் 207 குற்றங்கள் பதிவாகியிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் 188 வரை அதாவது 9மூ ஆன குறைவடைதலை அடையாளம் காணலாம். அதேபோன்று 2022 ஆம் அண்டில் 157 வரை மேலும் 16% வரையிலான குறைவடைதலை அவதானிக்கலாம்.

பாலயில் துன்புறுத்தல்களை மேற்கொள்வதற்கு முயற்சித்தல் தொடர்பாக 45 சிறு குற்றங்கள் 2021 ஆம் அண்டில் பதிவாகியதுடன், 2022 ஆம் ஆண்டில் 16 குற்றங்கள் வரை அதாவது 64% வரை குறைவடைந்துள்ளது.

குடும்ப வன்முறைகள் தொடர்பான சிறு குற்றங்கள் 2020 ஆம் ஆண்டில் 575 பதிவாகியதுடன், அந்த எண்ணிக்கை 534 வரை அதாவது 7% வரை 2021 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும் இந்த சிறு குற்றங்களில் கவனிக்கத்தக்க அளவிலான அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டில் காணப்படலாம் என்பதுடன், பதிவாகிய நிகழ்வுகளின் எண்ணிக்கை 820 ஆகும். அதாவது 2021 ஆம் அண்டுடன் ஒப்பிடுகையில் 54% ஆன அதிகரிப்பாகும்.

சிறுவர்களுக்கெதிரான சிறு குற்றங்கள்

அட்டவணை இலக்கம் - 08

தொடர் இலக்கம்	குற்றம்	2020				2021				2022			
		பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்	பதிவாகிய	தீர்க்கப்பட்ட	ஆய்வு செய்யப்படுகின்ற	தீர்வு சதவீதம்
1	பாலியல் துன்புறுத்தல்கள்	1349	1347	2	100%	1341	1338	3	100%	1252	1233	19	98%
2	சில குற்றங்களுக்கு ஏற்புடையதாக விடயங்களை முன்வைத்தல் 1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 365 இ(1)(2)(அ)(ஆ)(ஈ)	1	1	0	100%	1	1	0	100%	12	12	0	100%
வாடகை குடியிருப்பாளர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கிடையில் பிணக்குகள், ஊழியர் மற்றும் தொழில் கொடுநர்களுக்கிடையிலான பிணக்குகள் போன்ற துறைகளில் முறைப்பாடுகள் மூன்று ஆண்டுகளிலும் குறைவடைந்துள்ளமை அவதானிக்கலாம் என்பதுடன், அட்டவணைக்கமைவாக தீர்வு வீதம் 80% ம் பார்க்க உயர் மட்டத்தில் காணப்படுகிறது.

நட்டங்கள் தொடர்பான நிகழ்வுகள் பற்றிய முறைப்பாடுகளில் முறையான அதிகரிப்பு அட்டவணை மூலம் காண்பிக்கப்படுகிறது. அந்த முறைப்பாடுகள் 2020 ஆம் ஆண்டில் 16625 வரை பதிவாகியுள்ள துடன், 2021 ஆம் ஆண்டில் அது 17030 வரை அதாவது 2% ஆல் அதிகரித்துள்ளது. அதனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 18157 வரை அதாவது 7% ஆல் அதிகரித்துள்ளது. தீர்வு சதவீதம் 2021 ஆம் ஆண்டில் 87% தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 90% வரை விருத்தியடைந்துள்ளது.

மொத்தமாக பல்வேறுபட்ட முறைப்பாடுகளை கவனத்தில் கொள்கையில் 2020 ஆம் ஆண்டில் 954299 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் அதகிரிக்கும் சதவீதம் 3% ஆகும். அதாவது பதிவாகிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 925886 ஆகும். 2022 ஆம் ஆண்டில் மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 932114 வரை அதாவது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1% ஆல் அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்தமாக தீர்வு சதவீதம் 90% ஐ விஞ்சியுள்ளது.

2.4 வாகன விபத்துகள்

இலங்கை பொலிஸிடம் பதிவாகியுள்ள வாகன விபத்துகள் தொடர்பாக கவனத்தில் கொள்கையில், மரணங்களை ஏற்படுத்தும் வாகன விபத்துக்கள், படுகாயம் ஏற்படுத்தியுள்ள வாகன விபத்துக்கள், சிறிய காயங்கள் தொடர்பான வாகன விபத்துக்கள், நட்டங்கள் தொடர்பான விபத்துக்கள் என்ற வகையில் 4 தொகுதிகளின் கீழ் பிரித்து தரவுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. பின்வரும் அட்டவணை மூலம் 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளின் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு வாகன விபத்தக்கள் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியான பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வாகன விபத்துக்கள்

அட்டவணை இலக்கம் - 19

ஆண்டு	மரணம் சம்பவிக்கும் விபத்துக்கள்	படுகாயங்களை ஏற்படுத்தும் விபத்துக்கள்	சிறிய காயங்களை ஏற்படுத்தும் விபத்துக்கள்	சொத்துக்கள் நட்டங்கள் தொடர்பான விபத்துக்கள்	மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை	மரண மடைந்த எண்ணிக்கை	வாகனங்களின் எண்ணிக்கை	1000ம் வாகனங்களுக்கு விபத்துக்களின் எண்ணிக்கை
2020	2040	6619	8909	5847	23415	2144	8297852	3
2021	2414	6401	8070	5434	22319	2513	8331702	3
2022	2395	6231	8209	5118	21953	2515	8021953	3

மூலம் - மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகம்

க.கொ. இதில் சில தரவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படையதாக வாகன விபத்துகள் தொடர்பாக கவனத்தில் கொள்கையில் பல சந்தர்ப்பங்கள் தவிர்ந்து சாரதி விபத்துகளில் குறைவடைதல் காணப்படுகிறது. மரணங்களை ஏற்படுத்தும் விபத்துகளை நோக்கும்போது 2020 ஆம் ஆண்டில் 2040 நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் 2414 வரை அதாவது 18% வரையிலான அதிகரிப்பு காணப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் மரணங்களை ஏற்படுத்தும் விபத்துகள் 2395 வரை அதாவது 1% ஆல் சிறிய அளவில் குறைவடைந்துள்ளது.

படுகாயம் ஏற்படுத்தியுள்ள வாகன விபத்துகள் தொடர்பில் ஆய்வு செய்கையில் முறையாக குறைவடைதலை காணலாம். 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 6401 வரை அதாவது 13% வரையிலும், 2022 ஆம் ஆண்டில் 6231 வரை அதாவது மீண்டும் 3% ஆல் குறை வடைந்துள்ளது.

சிறிய காயங்கள் தொடர்பான வாகன விபத்தகள் 2020 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள எண்ணிக்கை 8909 ஆவதுடன், 2021 ஆம் ஆண்டில் 8070 வரை அதாவது 9% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் சிறிய காயங்கள் தொடர்பான விபத்தகள் 8209 வரை அதாவது 2% ஆல் அதிகரித்துள்ளது.

சொத்துக்களின் நட்டங்கள் தொடர்பான விபத்துகளை கவனத்தில் கொள்கையில் 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய விபத்துகள் 5847 உடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 5434 வரை அதாவது 7% ஆல், 2022 ஆம் ஆண்டில் 5118 வரை அதாவது 6% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒட்டு மொத்தமாக வாலகன விபத்துகளில் வீழ்ச்சியடைதல் காண முடியுமென்பதுடன், 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய வாகன விபத்துகள் 23415 உடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 22319 வரை அதாவது 5% ஆன குறைவடைதல் 2021 ஆம் ஆண்டில் காணப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் பதிவாகிய விபத்துகளின் எண்ணிக்கை 21953 ஆகும். அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2% ஆன வீழ்ச்சியடைதலாகும்.

அட்டவணைக்கமைவாக வாகன விபத்துகள் குறைவடைதல் காணப்படினும், வாகன விபத்துகள் காரணமாக மரணமடைந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வாகன விபத்துகள் காரணமாக 2144 பேர் 2020 ஆம் ஆண்டில் மரணமடைந்துள்ளதுடன், அதனுடன் ஒப்பிடுகையில் 2513 பேர் 2021 ஆம் ஆண்டில் மரணமடைந்துள்ளனர். அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17% ஆன அதிகரிப்பாகும். 2022 ஆம் ஆண்டில் மரணமடைந்த எண்ணிக்கை 2515 வரை மேலும் அதிகரித்துள்ளது.

வாகனங்களின் இறக்குமதியை மட்டுப்படுத்தல் காரணமாக வாகனங்களின் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளதுடன், 1000 ம் வாகனங்களுக்கு விபத:தகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 3 என்ற வகையில் மாற்றங்கள் ஏற்படாது உள்ளது.

2.4.1 அதிவேக வீதிகள் சார்ந்து வாகன விபத்துகள்

அதிவேக வீதி விபத்துகள்

அட்டவணை இலக்கம் - 20

தொ.இல.	விபத்துகளின் வகை	ஆண்டு		
		2020	**2021**	**2022**
1	மரணங்களை ஏற்படுத்தும் விபத்துகள்	9	7	14
2	படுகாயம் ஏற்படுத்தும் விபத்துகள்	8	9	7
3	சிறிய காயங்களை ஏற்படுத்தும் விபத்துகள்	60	95	81
4	சொத்துக்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் விபத்துகள்	231	350	428
மொத்தம்		**308**	**461**	**530**

மூலம் - மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகம்

அட்டவணைக்கமைவாக அதிவேக வீதிகள் சார்ந்து வாகன விபத்துகளில் அதிகரிப்பு 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் காணப்படுகிறது. அட்டவணையின் தரவுகளுக்கமைவாக பாரிய காயங்களுடனான விபத்தகள் மற்றும் சிறிய காயங்களுடன் கூடிய விபத்துகள் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ஒழுங்குமுறையில் 22% ஆல் மற்றும் 15% ஆல் குறைவடைந்துள்ளதுடன், மரணம் சம்பவிக்கும் விபத்துகள் 100% ஆல் மற்றும் சொத்துக்கள் நட்டங்கள் தொடர்பான விபத்தகள் 22% ஆல் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்த விபத்துகளின் அதிகரிப்பானது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 461 தொடக்கம் 530 வரை அதாவது 15% ஆல்அதிகரித்துள்ளமை அவதானிக்கலாம்.

2.4.2 வாகன விபத்துகளை தவிர்ப்பதற்கான செயற்பாடுகள்

வாகன விபத்துகளை தவிர்ப்பதற்காக உத்தியோகத்தர்களை வீதிகளில் கடமைகளில் ஈடுபடுத்தலுக்கு மேலதிகமாக, அறிவுறுத்தும் செற்பாடுகளும் இலங்கை பொலிஸால் பின்பற்றப்படுகிறது. அதன்போது வீதியை பயன்படுத்துகின்ற சமூகத்தின் பல்வேறு தரப்புகளை அறிவுறுத்தல் மிக முக்கியமான நடவடிக்கையாக கவனத்தில் கொள்ளப்படுகிறது. அதற்காக அறிவுறுத்தல் விரிவுரைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், காட்சிக்கூடங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பின்வரும் அட்டவணை மூலம் அது தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை இலக்கம் - 21

தொ.இல	கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்	மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
1	பொலிஸ் உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்	24	1223
2	அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்	8	395
3	அரச நிறுவனங்களின் விரிவுரை	6	326
4	தனியார் நிறுவனங்களின் விரிவுரை	5	912
5	தனியார் நிறுவனங்களின் சாரதிகளுக்கான விரிவுரைகள்	7	509
6	பேருந்து வண்டிகளின் சாரதிகளை அறிவுறுத்தல்	11	1301
7	முச்சக்கர வண்டிகளின் சாரதிகளை அறிவுறுத்தல்	1	90
8	மிதி வண்டி ஓட்டுநர்களை அறிவுறுத்தல்	4	339
9	ஏனைய சாரதிகளை அறிவுறுத்தல்	2	273
10	மோட்டார் வாகன கலை நிகழ்ச்சி	7	3290
11	தலைமையக கற்கைநெறிகள் ஏனைய	4	201
12	சிரேட்ட மோட்டார்வாகன முகாமைத்துவ கற்கைநெறி	1	136
13	கனிஷ்ட மோட்டார் வாகன முகாமைத்துவ கற்கைநெறி	1	81
14	விமானப்படை உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்	2	76
15	கடற்படை உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்	1	45
16	ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்	5	
17	கண்காட்சி கூடங்கள்	2	10000 இற்கும் மேற்பட்ட
18	பாடசாலை காட்சிகள்	21	1127
19	சாரதி முன்னோடி பயிற்சிகள்	19	1635

மூலம் - மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகம்

2.4.3 மோட்டார் வாகனம் செலுத்தும் போது மேற்கொள்கின்ற தவறுகளால் அபராதம் மற்றும் நீதிமன்றத்தால் உழைக்கப்பட்ட வருமானம்

அட்டவணை இலக்கம் - 22

	தவறு	வெளிப்படுத்திய வழக்குகளின் எண்ணிக்கை	அபராதம் வழங்கிய எண்ணிக்கை	அபராதம் காரணமாக பெறப்பட்ட வருமானம்	நீதிமன்றத்தால் பெறப்பட்ட வருமானம்
1	ஆபத்தான வகையிலும் கவனயீனமாகவும் வாகனம் ஓட்டுதல்	8296	0	ரூபா0	ரூபா 80320720
2	மிக வேகமாக வாகனம் ஓட்டுதல்	10832	10011	ரூபா. 28235800	ரூபா.14817050
3	குடிபோதையில் வாகனம் செலுத்தல்	25038	0	ரூபா.0	ரூபா.621818255
4	விளக்கு இல்லாத மோட்டார் வாகனங்கள்	117946	43728	ரூபா.43124000	ரூபா.3890500
5	வீதி சட்டங்களை மீறுதல்	87851	80671	ரூபா.141236300	ரூபா.9178300
6	தேர்ச்சி சான்றிதழ் இல்லாது வாகனம் ஓட்டுதல்	25969	10711	ரூபா.12822000	ரூபா.261849050
7	கருப்பு புகையுடன் கூடிய வாகனங்கள் ஓட்டுதல்	530	265	ரூபா.138000	ரூபா.7542500
8	பாதுகாப்புடன் கூடிய தலை கவசங்களை அணியாது வாகனம் ஓட்டுதல்	203586	191899	ரூபா.209913000	ரூபா.6803000
9	சிகப்பு வெளிச்சத்துக்கு எதிராக வாகனம் ஓட்டுதல்	55107	48699	ரூபா.49108600	ரூபா.722500
10	பாதசாரி கடவைகளில் நிறுத்த தவறுதல்	30030	27942	ரூபா.28792500	ரூபா.2269200
11	காப்புறுதி சான்றிதழ் இல்லாது வாகனம் ஓட்டுதல்	78039	0	ரூபா.0	ரூபா.63492700
12	அடையாளம் காணுவதற்குள்ள தகடுகள் தொடர்பான தவறுகள்	12791	9159	ரூபா.9237800	ரூபா.1143500
13	வருமான அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தல்	93596	77744	ரூபா.76877250	ரூபா.18878800
14	மோட்டார் வாகனங்களை நிறுத்தும் தவறுகள்	77912	72889	ரூபா.79588500	ரூபா.1688600
15	வீதியில் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற வாகனங்கள்	413	118		ரூபா.214000
16	பொலிஸ் சமிக்ஞை மற்றும் கட்டளைகளை கடைபிடியாமை	9124	8093	ரூபா.16613950	ரூபா.3724000
17	ஆபத்தான வகையில் பொருட்களைள ஏற்றுதல் மற்றும் போக்குவரத்துச் செய்தல்	2861	2377	ரூபா.1714600	ரூபா.653000
18	மோசடியான வகையில் இலக்க தகடு வருமான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பயன்படுத்தல்	132	79	ரூபா.102000	ரூபா.848500
19	ஏனைய தவறுகள்	760562	582046	ரூபா.598986230	ரூபா.158434644
	மொத்தம்	**1600615**	**1166898**	**ரூபா.1296617530**	**ரூபா.1258288819**

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

2.5 ஏனைய பொது மக்கள் சேவைகள்

இலங்கை பொலிஸின் முதன்மையான கடமை பொறுப்புகளுக்கு பங்களிப்பு வழங்கிக்கொண்டு, பொது மக்களுக்கு வழங்கும் விசேட சேவைகளும் காணப்படுகிறது. அதன்கீழ் பொது மக்களின் முறைப்பாடுகளை நேரடியாக பொலிஸ் தலைமையகத்திடம் சமர்ப்பிக்கும் சேவைகளும், 119 அவசர அழைப்பு சேவைகளும்பொது மக்களுக்கு இசைவு அறிக்கைகள் வழங்கும் சேவைகளும், பொலிஸ் நடவடிக்கைகளின் பொருட்டு பொது மக்களின் ஒத்துழைப்பை நேரடியாக பெற்றுக்கொள்கின்ற சமூக பொலிஸ் சேவைகளும் என்ற வகையில் குறிப்பிடலாம். இதற்கு மேலதிகமாக பல்வேறு எதிர்ப்பு போராட்டங்கள், பொது மக்கள் கலவரங்கள் போன்ற சந்தர்ப்பங்களில் பொது மக்களின் உயிர்கள் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக கலவரங்களை தடுக்கும் சேவைகளும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

2.5.1 பொது மக்களின் முறைப்பாடுகளைத் தீர்க்கும் விசேட சேவைகள்

பொது மக்களின் முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு மிகவும் வினைத்திறனாகவும் பயனுள்ள வகையிலும் செயல்படுவதற்காக பொது மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் தீர்க்கும் சேவைகள் மாகாண மட்டத்திலும் பொலிஸ் தலைமையகம் சார்ந்து நடைமுறைப்படுகின்றன. இதனூடாக மக்கள் தமது முறைப்பாடுகளை நேரடியாக பொலிஸ்மா அதிபரிடம் அல்லது வேறு உயர் உத்தியோகத் தரிடம் முன்வைத்து நிவாரணம் பெற்றுக்கொள்ளலாம். இச் சேவைக்காக பெற்றுக்கொண்ட பொது மக்களின் முறைப்பாடுகள் தொடர்பான புள்ளிவிபர தகவல்கள் பின்வரும் அட்டவணை மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

2020 - 2022 பதிவாகிய முறைப்பாடுகள்

அட்டவணை இலக்கம் - 23

தொ.இல	முறைப்பாடுகளின் வகை	2020				2021				2022			
		பதிவாகிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை	தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	ஆய்வு செய்யப்பட்டு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	தீர்வு சதவீதம்	பதிவாகிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை	தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	ஆய்வு செய்யப்பட்டு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	தீர்வு சதவீதம்	பதிவாகிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை	தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	ஆய்வு செய்யப்பட்டு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	தீர்வு சதவீதம்
1	பொலிஸ்மா அதிபரின் பொது மக்களுக்கான நிவாரண தினம்	315	280	35	89%	16	7	9	44%	33	17	16	52%
2	பொலிஸ் அலுவலர்களின் நிவாரண திகதி	2050	2050	0	100%	2900	2893	7	100%	3091	2893	198	94%
3	"பொலிஸ்மா அதிபரிடம் கூறுங்கள்"	2908	2046	862	70%	3432	1841	1591	54%	2750	1290	1460	47%
4	"பொது மக்களின் நிவாரண கூடம்	1725	1086	639	63%	2095	1282	813	61%	2110	876	1234	42%
மொத்தம்		6998	5462	1536	78%	8443	6023	2420	71%	7984	5076	2908	64%

மூலம் - பொலிஸ் தலைமையகம்

பொது மக்களின் நிவாரண திகதியில் பொது மக்கள் தமது பிரச்சினைகள் பொலிஸ் மா அதிபரிடம் தனிப்பட்ட வகையில் சமர்ப்பிக்க முடியுமென்பதுடன், கடந்த காலத்தில் கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக மக்கள் பங்கு கொள்ளுதல் சுகாதார காரணங்களால் இடைநிறுத்தப்பட்டது.

அதன்படி தொடர்ச்சியாக பொலிஸ் மா அதிபரின் நிவாரண திகதிக்காக கிடைக்கப்பெறும் முறைப் பாடுகளில் குறைவடைதல் அட்டவணைப் பிரகாரம் காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டில் 16 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 33 வரை அதாவது 106% ஆன அதிகரிப்பு காணலாம். தீர்வு வீதம் 2022 ஆம் ஆண்டில் 52% ஆகும்.

பொலிஸ் அலுவலர்களின் நிவாரண திகதிக்காக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளில் அதிகரிப்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்டள்ள மூன்று ஆண்டுகளிலும் காணக்கூடியதாக உள்ளது. 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2900 ம் ஆகியதுடன், 2022 ஆம் ஆண்டில் 3091 வரை அதாவது 7% ஆல் அதிகரித்துள்ளது. இந்த முறைப்பாடுகளில் தீர்வு வீதம் 94% போன்ற உயர் மட்டத்தில் காணப்படுகிறது.

இணையதளம் ஊடாக முறைப்பாடுகள் சமர்ப்பித்தலை ஊக்குவித்தல் காரணமாக "பொலிஸ்மா அதிபரிடம் சொல்லுங்கள்" என்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் அதிகரிப்பு அட்டவணையின் தரவுகள் பிரகாரம் காணலாம். எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளில் 3432 தொடக்கம் 2750 வரை 20% ஆன வீழ்ச்சி அடையளாம் காணலாம். 2022 ஆம் ஆண்டில் தீர்வு வீதம் 47% போன்ற குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது.

பொது மக்கள் நிவாரண கூடத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கவனத்தில் கொள்கையில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று ஆண்டுகளிலும் சிறிய அதிகரிப்பு காணப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில் 2095 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 2110 வரை அதாவது 1% ஆல் அதிகரித்துள்ளது. இந்த முறைப்பாடுகளிலும் தீர்வு வீதம் 42% போன்ற குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது.

ஒட்டு மொத்தமாக இந்த விசேட சேவைகளின் பொருட்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சிறிய அளவிலான குறைவடைதல் 2022 ஆம் ஆண்டில் காணப்படுகிறது. அதன்படி 2021 ஆம் ஆண்டில் பதிவாகிய மொத்த முறைப்பாடுகளான 8443 உடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 7984 வரை அதாவது 5% ஆன குறைவடைதலை அடையாளம் காணலாம். ஒட்டுமொத்தமாக தீர்வு வீதம் 2022 ஆம் ஆண்டில் 64% ஆகும்.

♦ 119 துரித அழைப்புச் சேவை

119 பொலிஸ் திடீர் அழைப்பு சேவை பொது மக்களிடத்தில் மிக வேகமாக பரவலாகிய சேவையாக குறிப்பிடலாம். இச் சேவையின் பொருட்டு கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை மிக உயர்ந்த பெறுமதியைக் கொள்கின்றது. குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றவுடன், குறித்த பொலிஸ் நிலையத்திடம் அனுப்பி வைக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையம் மூலம் உடனடியாக ஆய்வுகள் ஆரம்பிக்கப்படும்.

119 பதிவாகிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை

அட்டவணை இலக்கம் - 24

ஆண்டு	பதிவாகிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை
2020	1,232,272	1,232,272
2021	1,073,917	1,073,917
2022	962642	962642

பொலிஸ் மா அதிபரின் கட்டளையிடும் தகவல் பிரிவு

2020ஆம் ஆண்டில் இந்த 119 திடீர் அழைப்பு சேவைகளின் பொருட்டு 1,232,272 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், 2021ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 1,073,917 வரை அதாவது 2020 ஆம்ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13% ஆல் குறைவடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 962642 ஆவதுடன், அது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10% ஆன வீழ்ச்சியடைதலாகும். மூன்று ஆண்டுகளிலும் கிடைக்கப்பெற்ற எல்லா முறைப்பாடுகளும் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திடம் உடனடியாக முன்வைக்கப்பட்டு ஆய்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.5.2 இசைவு அறிக்கைகள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விண்ணப்பங்கள் பொருட்டு இசைவு அறிக்கைகளை வழங்குதல் இலங்கை பொலிசால் மேற்கொள்கினற மிக முக்கியமான பணியாக கருதப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் இசைவு அறிக்கைகள் வழங்குதல் தொடர்பாக எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் பினவரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

இசைவுச் சான்றிதழ் வழங்குதல்

அட்டவணை இலக்கம் 25

விண்ணப்பபடிவங்களின் வகை	கிடைக்கப் பெற்ற விண்ணப்பங் களின் எண்ணிக்கை	வழங்கப் பட்ட அறிக்கை களின் எண்ணிக்கை	வீதம்	வழங்குவதற் குள்ள அறிக்கை களின் எண்ணிக்கை	கிடைக்கப்பெற்ற பணம் (ரூபா)
உள்நாட்டு தடைநீக்க அறிக்கைகள் (ஒல்கட் மாவத்தை விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் அலுவலகம் (online) மூலம்	156580	151974	97%	4606	234,870,000.00
வெளிநாட்டு தடைநீக்க அறிக்கைகள் (தூதரக அலுவலகங்கள் மூலம்)	425	375	88%	50	637,500.00
மொத்தம்	**157005**	**152349**	97%	**4656**	**235,507,500.00**

மூலம் - பொலிஸ் தலைமையகம்

அட்டவணையின் தரவுகளின் படி 2022 ஆம் ஆண்டில் இலங்கை பொலிஸிடம் உள்நாட்டு இசைவு அறிக்கைகளின் பொருட்டு 156590 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் 151974 இற்காக இசைவு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அது வீதமாக 97% ஆகும்.

அட்டவணைக்கமைவாக வெளிநாட்டு விண்ணப்பங்கள் 425 கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதில் 375 இற்காக இசைவு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அது 88% வீதமாகும். அதன்படி கிடைக்கப் பெற்ற மொத்த விண்ணப்பங்கள் பொருட்டும் அறிக்கைகள் வழங்குதல் 97% வீதமாகும். இசைவு அறிக்கைகள்மூலம் உழைக்கப்பட்டுள்ள வருமானம் ரூபா. 235,507,500.00 அதாவது ரூபா. 235 மில்லியனுக்கும் அதிகமாகும்.

2.5.3 சமூக பொலிஸ் சேவை

2021 ஆம் ஆண்டின் சமூக பொலிஸ் குழுக்களை நடாத்தல் தொடர்பாக அட்டவணையில் உள்ளடக்கப் பட்டுள்ள தகவல்களின் படி 599 பொலிஸ் நிலையங்களுக்கு ஏற்புடையதான தரவுகள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

சமூக பொலிஸ் குழுக்களை நடாத்தல்

அட்டவணை இலக்கம் - 26

தொடர் இலக்கம்	பிரிவுகளின் எண்ணிக்கை	தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் இடங்களின் எண்ணிக்கை	தாபிக்கப்பட்டுள்ள குழுக்களின் எண்ணிக்கை	நடாத்தப்பட வேண்டிய குழுக்களின் எண்ணிக்கை	நடாத்தியுள்ள குழுக்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய உறுப்பினர்களின் எண்ணிக்கை	நிலைய பொறுப்பு அதிகாரி பங்குபற்றிய எண்ணிக்கை	மாவட்டத்திற்கு பொறுப்பான பொ.அ உபொ.அ பங்கு பற்றியதன் எண்ணிக்கை	பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் பங்கு கொள்வதில் எண்ணிக்கை
2022 ஆண்டில் சமூக பொலிஸ் ஆலோசனைகளை நடாத்தல்									
1	45	602	602	7189	4620	45334	4398	2554	284
2022 ஆண்டில் சமூக பொலிஸ் நிலைய பொது மக்கள் குழுக்களை நடாத்தல்									
2	45	602	602	7188	4523	126477	5920	2289	221
2022 ஆண்டில் பொது மக்கள் பாதுகாப்பு குழுக்களை நடாத்தல்									
3	45	602	14192	170304	97898	1451455	29827	1428	183

மூலம் - சமூக பொலிஸ் பிரிவு

அட்டவணை பிரகாரம் சமூக பொலிஸ் ஆலோசனை குழுக்களை நடாத்தல் தொடர்பாக கவனத்தில் கொள்கையில் சம்பந்தப்பட்ட ஆண்டில், 7189 சபை அமர்வுகளை நடாத்த வேண்டி இருந்த போதும், நடாத்தப்பட்டுள்ள சபை அமர்வுகளின் எண்ணிக்கை 4620 ஆகும். அது சதவீதமாக 64%ஆகும்.

2022 ஆம் ஆண்டில் சமூக பொலிஸ் இடத்திற்கான பொது மக்கள் பாதுகாப்பு குழுக்களை நடாத்தப்பட வேண்டிய எண்ணிக்கை 7188 ஆயினும், நடாத்தியுள்ள குழுக்களின் எண்ணிக்கை அட்டவணை பிரகாரம் 4523 ஆகும். சதவீதமாக 63%ஆகும்.

2022 ஆம் ஆண்டில் பொது மக்கள் பாதுகாப்பு குழுக்களை நடாத்தல் தொடர்பாக தரவுகளின் படி ஆண்டில் 170304 குழுக்களை நடாத்தப்படுதல் வேண்டுமாயினும், நடாத்தப்பட்டுள்ள எண்ணிக்கை 97898 ஆகும். சதவீதமாக 57%ஆகும்.

2.5.4 பொது சமாதானம் முகாமைத்துவம் செய்தல்

போராட்டங்கள், கிளர்ச்சிகள் மற்றும் சத்தியாகிரகங்கள் போன்ற பல்வேறு வகையில் மக்கள் குழுக்கள் ஒன்று கூடும் போது, அந்த மக்கள் ஆத்திரமூட்டல் மற்றும் வன்முறையாளர்களாக மாற வாய்ப்பு உள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் பொது மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு அளித்து அமைதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு காவல்துறையினறுக்கு உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நல்லெண்ணத்துடன், நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த குழுக்களை கலைக்கப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டில் மேற்கொண்ட கலைப்புகள் மற்றும் பயன்படுத்திய மனித மற்றும் பௌதீக வளங்கள் பின்வருமாறாகும்.

- 2022.0101 தொடக்கம் 2022.12.31 வரை ஈடபடுத்திய மொத்த கிளர்ச்சிகளுக்கு எதிரான குழுக்களின் எண்ணிக்கை - 1918
- இந்தக் காலப்பகுதியில் குழப்பங்களை ஏற்படுத்திய குழுக்களை கலைக்கப்படுதல் - 44
- பயன்படுத்தப்பட்ட கண்ணீர் புகை தோட்டாக்களின் எண்ணிக்கை - 4273
- கண்ணீர் புகை குண்டுகளின் எண்ணிக்கை - 1094
- நீர் தாக்குதல் வாகனங்களின் எண்ணிக்கை - 38
- கலைக்கும் பொருட்டு பயன்படுத்திய மொத்த நீர் (லீற்றர்) - 67500

2.6 பொலிஸ் மருத்துவ சேவை

இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொருட்டு சிறந்த தரம் மற்றும் உயர் மருத்துவ வசதி களையும் கொண்டமைந்த பொலிஸ் மருத்துவமனை முறைமையொன்று நடைமுறைப்படுவதுடன், அதன்மூலம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டுமின்றி அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் நன்மை அடைகின்றார்கள்.

2020 - 2022 ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டு காலப் பகுதியின் பொருட்டு பொலிஸ் மருத்துவமனைகளின் மூலம் நடைமுறைப்பட்ட மருத்துவ சேவைகள் தொடர்பாக பின்வரும் அட்டவணை மூலம் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பொலிஸ் மருத்துவமனை சார்ந்து சிகிச்சை சேவைகள்

அட்டவணை இலக்கம் - 27

தொ.இல	நோய் நிலைமை	2020 ஆம் ஆண்டில் நோயாளர்களின் எண்ணிக்கை	2021 ஆம் ஆண்டில் நோயாளர்களின் எண்ணிக்கை	2022 ஆம் ஆண்டில் நோயாளர்களின் எண்ணிக்கை
1.	நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம்	கொரோனா நோய் நிலைமை காரணமாக கிளினிக் நடாத்தப்படவில்லை என்பதுடன், நோயாளர்களிடம் மருந்துகள் அனுப்பவில்லை.		92375
2.	இருதய நோய்			9271
3.	ஏனைய நோய்கள் (க்ளினிக் நோய்கள்)	152096	141467	22125
4.	வெளியக நோயாளர்கள்	48000	47430	103073
5.	வதிவிட நோயாளர்கள்	5081	4538	4678
மொத்தம்		**205177**	**193435**	**231522**

மூலம் - பொலிஸ் மருத்துவ சேவை பிரிவு

பின்வரும் அட்டவணைக்கமைவாக கொவிட் தொற்று நோய் நிலைமைக்கு மத்தியிலும், 2020 ஆம் ஆண்டில் 205177நோயாளர்கள் பொலிஸ் மருத்துவமனைமூலம் சிகிச்சை பெற்றுள்ளனர். 2021 ஆம் ஆண்டில் 193435 நோயாளர்கள் பொலிஸ் மருத்துவமனைமூலம் சிகிச்சைகளை பெற்றுக் கொண்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் சிகிச்சை பெற்றுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை 231522 ஆகும். அது சதவீதமாக 2021 ஆம் ஆண்டிலும் பார்க்க 20% ஆன அதிகரிப்பாகும்.

2.6.1 பொலிஸ் உத்தியோகத்தர்களின் மரணங்கள்

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு என்பவற்றை பாதுகாக்கும் பணிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் பொருட்டு கவனிக்கத்தக்க செலவினங்களை மேற்கொள்வதுடன், அவர்களின் சுகாதார பாதுகாப்பின் பொருட்டு விசேட கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வாறான சூழலில் ஒவ்வொரு ஆண்டிலும் நிகழ்கின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் மரணங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகையில்,தொற்றா நோய்கள் மீது குறிப்பிடத்தக்க அளவில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். பின்வரும் அட்டவணை மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் பொலிஸ் உத்தியோகத்தர் களின் மரணங்கள் தொடர்பாக ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் மரணங்கள்

அட்டவணை இலக்கம் - 28

தொடர் இலக்கம்	மரணமடைவதற்கு காரணங்கள்	2022	
		பெண்	ஆண்
1	பல்வேறு சுகயீனங்கள்	0	58
2	இருதய நோய்கள்	0	78
3	புற்றுநோய்	2	18
4	சீறுநீரக நோய்கள்	0	33
5	தற்கொலைகள்	0	10
6	வாகன விபத்துகள்	0	42
7	ஏனைய	0	9
மொத்தம்		2	248

மூலம் - பொலிஸ் மருத்துவ சேவை பிரிவு

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மரணிப்ப தற்கான காரணங்களை ஆராயும்போது, 2022 ஆம் ஆண்டில் 250 அலுவலர்கள் மரணமடைந் துள்ளார்கள். அதில் தற்கொலைகள், வாகன விபத்துகள் மற்றும் ஏனைய காரணங்கள் மீது மரண மடைந்த எண்ணிக்கை 61 ஆவதுடன், எஞ்சிய 189 மரணங்களும் பல்வேறு நோய்கள் காரணமாக ஏற்பட்டுள்ளது. அதில் அதிகூடிய மரணங்களின் எண்ணிக்கை அதாவது 78 ம் இருதய நோய்கள் காரணமாக ஏற்பட்டுள்ளதுடன், பல்வேறு சுகயீனங்கள் காரணமாக 58 பேர் மரணமடைந்துள்ளனர். சீறுநீரக நோய்கள் காரணமாகவும் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் மரணமடைந்துள்ளதுடன், அந்த எண்ணிக்கை 33 ஆகும்.

தற்கொலை காரணமாகமரணமடைந்த எண்ணிக்கை 10 ஆவதுடன், அது ஒட்டு மொத்த மரணங்களில் 4% ஆகும். ஒட்டுமொத்த பொலிஸ் அலுவலர்களின் மரணங்களில் 31% இருதய நோய் காரணமாகவும், 17% வாகன விபத்துகள் காரணமாகவும், 13% சிறுநீரக நோய்கள் காரணமாகவும் ஏற்பட்டுள்ளது.

2.7 ஆட்சேர்ப்பு மற்றும் தரமுயர்வு மற்றும் இடமாற்றங்கள்

பொலிஸ் கடமைகளை வினைத்திறனாக நிறைவேற்றும் வகையில் போதுமான மனிதவளங்களை பெற்றுக்கொள்வதற்காக உரிய காலப்பகுதியில் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளப்படுவதுடன், சேவையில் ஈடுபட்டுள்ள மனிதவளங்களின் பொருட்டு சேவை திருப்தியை மேம்படுத்தும் நோக்கத்தில், பொருத்தமான வகையில் தரமுயர்வுகளை நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன்கீழ் பின்வரும் அட்டவணைகள் மூலம் 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் தரமுயர்வுகள் தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் - 29

ஆட்சேர்ப்புகள்						
பதவி	**உ.பொ.பரி**	**அ.உ.பொ.பரி**	**பொ.கா**	**அ.பொ.கா**	**பொ.கா.சா**	**மொத்தம்**
பொதுவான பொலிஸ் கடமைகள்	169	21	2217	0	205	**2612**
விசேட செயற்படையணி	0	0	0	0	0	**0**
உதவி செவைகள்	28	0	0	0	0	**28**
மொத்தம்	**197**	**21**	**2217**	**0**	**205**	**2640**

மூலம் - மனிதவள முகாமைத்துவப் பிரிவு

2022 ஆம் ஆண்டில் தரமுயர்வு

அட்டவணை இலக்கம் - 30

தொ.இல.	**பதவி**	**ஒவ்வொரு பதவிக்கும் நிரந்தரமாக தரமுயர்த்தப்பட்ட எண்ணிக்கை**			**ஒவ்வொரு பதவிக்கும் பதில் கடமையாற்றுவதற்கு நியமனம் செய்யப்பட்ட எண்ணிக்கை**		
		பொதுவான சேவை	விசேட செயற்படையணி	உதவி சேவை	பொதுவான சேவை	விசேட செயற்படையணி	உதவி சேவை
1	சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்	1					
2	பிரதி பொலிஸ்மா அதிபர்				2		1
3	மகளிர் பிரதி பொலிஸ்மா அதிபர்						
4	சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்	1			9		
5	மகளிர் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்						
7	மகளிர் பொலிஸ் அத்தியட்சகர்	1					
8	உதவி பொலிஸ் அத்தியட்சகர்	10	5				
9	மகளிர் உதவி பொலிஸ் அத்தியட்சகர்		1				
10	பிரதான பொலிஸ் பரிசோதகர்	24		5			
11	மகளிர் பிரதான பொலிஸ் பரிசோதகர்	5		17			
12	பொலிஸ் அவதானிப்பாளர்	18					
13	மகளிர் பொலிஸ் பரிசோதகர்	2					
14	உப பொலிஸ் பரிசோதகர்	34		6			
15	மகளிர் உப பொலிஸ் பரிசோதகர்	8		7			
16	பொலிஸ் சார்ஜென்ட்	109		15			
17	மகளிர் பொலிஸ் சார்ஜென்ட்	7					
18	உப பொலிஸ் பரிசோதகர் (போக்குவரத்து)	2					
19	பொலிஸ் சார்ஜென்ட் சாரதி	12					
மொத்தம்		270	6	50	11	0	1

மூலம் - பொலிஸ் மனிதவள முகாமைத்துவ பிரிவு

2022 ஆம் அண்டில் இடமாற்றங்கள்

அட்டவணை இலக்கம் - 31

தொடர் இலக்கம்	பதவி	இடமாற்றங்கள்				தற்காலிக இடமாற்றங்கள்			
		வழங்குதல்	இரத்துச் செய்தல்	நீடித்தல்	மாற்றம் செய்தல்	வழங்குதல்	இரத்துச் செய்தல்	நீடித்தல்	மாற்றம் செய்தல்
1	சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்	6	0	0	0	0	0	0	6
2	சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (பதில் கடமையாற்றும்)	1	0	0	0	0	0	0	1
3	பிரதி பொலிஸ்மா அதிபர் (பதில்	10	0	0	0	0	0	0	10
4	பிரதி பொலிஸ்மா அதிபர் (பதில் கடமையாற்றும்)	9	0	0	0	0	0	0	9
5	சிரேட்ட பொலிஸ் அதிகாரி	43	2	0	0	0	0	0	45
6	சிரேட்ட பொலிஸ் அதிகாரி(பதில் கடமையாற்றும்)	19	1	0	0	0	0	0	20
7	பொலிஸ் அதிகார	15	0	0	0	0	0	0	15
8	உதவி பொலிஸ் அதிகாரி	76	5	0	2	0	0	0	83
9	மகளில் உதவி பொலிஸ் அதிகாரி	4	0	0	0	0	0	0	4
10	பிரதான பொலிஸ் பரிசோதகர்	319	39	41	21	11	5	2	438
11	மகளிர் பிரதான பொலிஸ் பரிசோதகர்	12	0	4	1	1	0	2	20
12	பொலிஸ் பரிசோதகர்	270	69	35	11	24	4	6	419
13	மகளிர் பிரதான பொலிஸ் பரிசோதகர்	19	2	1	0	3	0	1	26
14	உப பொலிஸ் பரிசோதகர்	803	213	110	17	82	11	42	1278
15	மகளிர் உப பொலிஸ் பரிசோதகர்	68	5	2	3	12	2	7	99
16	பொலிஸ் சார்ஜென்ட்	5196	1242	979	172	216	13	97	7915
17	மகளிர் பொலிஸ் சார்ஜென்ட்	116	11	4	3	3	2	4	143
18	பொலிஸ் கான்ஸடபிள்	6320	887	806	7148	411	90	235	15897
19	மகளிர் பொலிஸ் கான்ஸ்டபிள்	825	45	29	14	516	23	126	1578
20	பொலிஜ் சார்ஜென்ட் சாரதி	118	32	17	11	7	0	2	187
21	பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி	665	94	82	18	22	4	14	899
22	பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்	11	0	0	1	0	0	0	12
மொத்தம்		**14925**	**2647**	**2110**	**7422**	**1308**	**154**	**538**	**29104**

61

மூலம் - பொலிஸ் மனிதவள முகாமைத்துவ பிரிவு

2.8 பௌதீக வளங்களின் அபிவிருத்தி

நிறுவனத்திற்குரிய மனிதவளங்கள் ஆகக்கூடிய வினைத்திறன் மட்டத்தினை அடைந்துக்கொண்டு, சேவை விளைத்திறனை அதிகரிப்பதற்கு பௌதீக வளங்களை தேவையான அளவிற்கு பெற்றுக்கொள்ளுதல் முக்கியமான காரணியாகும். இலங்கை பொலிஸின் இத் தேவையை பூர்த்தி செய்துகொள்வதற்காக வருடாந்தம் பாரிய செலவினம் மேற்கொள்ளப்பட்டு கட்டிடங்களை நிருமாணித்தல் மற்றும் பழுதுபார்த்தல், புதிய பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் பிரிவுகள், காவல் சாவடிகளை ஆரம்பித்தல், மோட்டார் வாகனங்கள கொள்வனவு செய்தல், பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பொலிஸ் கடமைகளுக்கு தேவையான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ளுதல்என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அதன்கீழ் பௌதீக வளங்களின் அபிவிருத்திக்கு ஏற்புடையதான 2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகை பின்வருமாறாகும்.

2.8.1 நிருமாணிப்புகள் மற்றும் பழுதுபார்த்தல்கள்

நிருமாணிப்புகள் மற்றும் பழுதுபார்த்தல்களின் முன்னேற்றம்

அட்டவணை இலக்கம் - 32

தொடர் இலக்கம்	கட்டிடங்களின் வகை	அளவு	மொத்த கருத்திட்டம் பொருட்டு செவாகும் தொகை (ரூபா.மில்)	2022 ஆண்டுக்காக ஒதுக்கீடு (ரூபா.மில்)	2022.12.31 திகதியில் முன்னேற்றம்
1	பொலிஸ் நிலையங்களை நிருமாணித்தல்	10	1041.17	114.72	56.24
2	படையினறுக்கான இல்லங்களை நிருமாணித்தல்	8	1177.63	191	111.57
3	உத்தியோகபூர்வ இல்லங்களை நிருமாணித்தல்	10	1104.29	94.53	87.60
4	ஏனைய கட்டிடங்களை நிருமாணித்தல்	9	1357.2	125.62	72.57
5	பொலிஸ் நிலையங்களை பழுதுபார்த்தல்	11	132.25	25.31	23.35
6	படையினர் இல்லங்களை பழுதுபார்த்தல்	10	140.58	52.2	50.11
7	உத்தியோகபூர்வ இல்லங்களை பழுதுபார்த்தல்	39	156.62	38.01	30.75
8	ஏனைய பழுதுபார்த்தல்	63	494.37	159.28	140.29
மொத்தம்		**160**	**5604.11**	**800.67**	**572.48**

மூலம் - கட்டிடப் பிரிவு

2.8.2 பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் பிரிவுகள் மற்றும் காவல் சாவடிகளை ஆரம்பித்தல்.

2022ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் செயற்பாட்டு பிரிவுகள், பொலிஸ் பிராந்திய பிரிவுகள் மற்றும் பொலிஸ் சாவடிகளின் எண்ணிக்கை அட்டவணை இலக்கம் 33 மூலம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022.12.31 ஆம் திகதியில் முழுமொத்த பொலிஸ் நிலையங் களின் எண்ணிக்கையும் அதன்மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

பாலிஸ் நிலையங்கள், பொலிஸ் பிரிவுகள் மற்றும் பொலிஸ் சாவடிகள்

அட்டவணை இலக்கம் - 33

	பொலிஸ் நிலையங்கள்,	பொலிஸ் செயற்பாட்டு பிரிவு	பொலிஸ் பிரதேச பிரிவுகள்	பொலிஸ் சாவடிகள்
2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எண்ணிக்கை	8	2	0	2
2022.12.31 ஆம் திகதியில் மொத்த எண்ணிக்கை	607	79	45	188

மூலம் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

2.8.3 தரப்படுத்தல்

I. பொலிஸ் நிலையங்கள், அலகுகள், பிரிவுகள், பணியகங்கள் தரப்படுத்தல் அனைத்து எல்லா நடவடிக்கைகளும் முடிவுறுத்தியுள்ளதுடன், இறுதி அறிக்கை அனுமதிக்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

II. 2022.12.31 ஆம் திகதியில் நாட்டில் எல்லா பொலிஸ் நிலையங்களும் பின்வருமாறு தரப்படுத்தப் பட்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களை தரப்படுத்தல்

அட்டவணை இலக்கம் - 34

தொடர் இலக்கம்	தரம்	பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை
1	A 1 மிகை தரம்	46
2	A1	83
3	A2	55
4	A3	129
5	B	184
6	C	31
7	D	79
மொத்தம்		**607**

மூலம் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு

2.8.4 இலங்கை பொலிஸிற்கு சொந்தமான வாகனங்கள்

2022 ஆம் ஆண்டில் இலங்கை பொலிஸிடம் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் 2022.12.31 ஆம் திகதியில் இலங்கை பொலிஸிடம் உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

2022ஆண்டில் வாகனங்களை கொள்வனவு செய்தல்

அட்டவணை இலக்கம் - 35

வாகனங்களின் வகை	எண்ணிக்கை	செலுத்திய பணம் (ரூபா.மில்)
மகேந்திரா ஸ்கோர்பியோ ஜிப் வண்டிகள்	125	-
		2,618.53
மொத்த தொகை ரூபா		2,618.53

மூலம் - பொலிஸ் போக்குவரத்து பிரிவு

இலங்கை பொலிஸிற்கு உரியதான வாகனங்கள்

அட்டவணை இலக்கம் - 36

தொடர் இலக்கம்	வாகன வகை	பொலிஸ்மா அதிபரின் கீழ் பதிவு செய்துள்ள வாகனங்கள்	கட்டளையிடும் அலுவலரின் விசேட பதவியணியின் கீழ் பதிவு செய்துள்ள வாகனங்கள்	மொத்தம்
1	ஜிப் வண்டிகள்	1544	17	1561
2	கார் வண்டிகள்	750	11	761
3	வானொலி கார் வண்டிகள்	118	-	118
4	சிங்கல் கெப் வண்டிகள்	698	2	700
5	டபல் கப் வெண்டிகள்	203	6	209
6	வேன் வண்டிகள்	117	10	127
7	நோயாளர் வண்டிகள்	61	1	62
8	ட்ரக் வண்டிகள்	176	10	186
9	டீமோ பட்டா வண்டிகள்	5	-	5
10	பஸ் வண்டிகள்	187	3	190
11	நீர் பவுசர் வண்டிகள்	106	1	107
12	ட்ரக்டர் வண்டிகள்	188	-	188
13	கைட்ரக்டர் வண்டிகள்	40	-	40
14	கலிபவுசர் வண்டிகள்	15	-	15
15	முச்சக்கர வண்டிகள்	2383	-	2383
16	மிதிவண்டிகள்	4731	171	4902
17	இருக்கைகளை கொண்டுச் செல்லும் ட்ரக் வண்டிகள்	5	-	5
18	மோப்ப நாய்கள் கொண்டுச் செல்லும் வண்டிகள்	20	-	20
19	நீர் தாக்குதல் வண்டிகள்	15	-	15
20	யுத்த வண்டிகள்	52	-	52
21	இடர் வண்டிகள்	9	-	9
22	யுனிகோன் வண்டிகள்	5	-	5
23	பும்ட்ரக் வண்டிகள்	3	-	3
24	படகுகள்	33	-	33
25	பெகோ / புல்டோசர்/கெட்டபிலர்	6	3	9
26	போக் லிப்ட் வண்டிகள்	11	1	12
27	பீச் ரோவர் வண்டிகள்	5	-	5
28	நடமாடும் வேலை வண்டிகள்	5	-	5
29	நடமாடும் ஓய்வு வண்டிகள்	1	-	1
30	ட்ரக்டர் ட்ரேலர்	176	17	193
31	ட்ரக்டர் டேலர் பவுசர் வண்டிகள்	96	-	96
32	ட்ரக்டர் கலி வண்டிகள்	7	4	11
33	தீயணைப்பு வண்டிகள்	1	-	1
34	டிபர் வண்டிகள்	1	1	2
35	நடமாடும் பரிசொதனை வண்டிகள்	2	-	2
36	கல்ரோல்	1	-	1
37	கெரியர் வண்டிகள்	-	5	5
38	நீர்/தரை வண்டிகள்	-	2	2
39	தடைகள்	-	3	3
மொத்தம்		11776	268	12044

மூலம் - பொலிஸ் போக்குவரத்து பிரிவு

2.8.5 ஏனைய பௌதீக வளங்கள்

குற்றப் புலனாய்வு, போக்குவரத்து கட்டப்பாட்டு பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் முன்பயண கடமைகள் அடங்கலாக பல்வேறு விழாக்களின் போது பங்குபற்றச் செய்கின்ற மோப்ப நாய்கள் மற்றும் குதிரைகள் இலங்கை பொலிஸிடம் உள்ள முக்கியமான பௌதீக வளங்களாகும். அவைகளின் சேவை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை பொலிஸ் பாரிய செலவினை மேற்கொள்வதுடன், 2022.12.31 ஆம் திகதியில் இந்த சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் பின்வரும் வகையிலாகும்.

இலங்கை பொலிஸிற்கு சொந்தமான மோப்ப நாய்கள்

அட்டவணை இலக்கம் - 37

கடமை மற்றும் மோப்ப பணிகளுக்கும், கலைக் காட்சிகளின் பொருட்டும் பயன்படுத்தும் மோப்ப நாய்கள்	பயிற்று விக்கப்படும் மோப்ப நாய்களின் எண்ணிக்கை	ஓய்வுபெறச் செய்விக்கப் பட்டுள்ள மோப்ப நாய்கிளன் எண்ணிக்கை	சுகவீன முற்றுள்ள மோப்ப நாய்களின் எண்ணிக்கை	இனப் பெருக்கம் செய்வதற்காக பயன்படுத்தும் நாய்களின் எண்ணிக்கை	இனப்பெருக்கம் மற்றும் அன்பளிப்புகளின் ஊடாக கிடைக்கப்பெற்ற நாய் குட்டிகளின் எண்ணிக்கை	**மொத்த எண்ணிக்கை**
221	22	21	2	1	6	**273**

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

பொலிஸிற்கு சொந்தமான குதிரைகள் தொடர்பான விபரங்கள்

அட்டவணை இலக்கம் - 38

குதிரைகளின் எண்ணிக்கை	குதிரைகளின் பெறுமதி
37	ரூபா. 1,755,967.30 ஆன குதிரைகள் 02 (வயது 20 இற்கு மேற்பட்ட)
	ரூபா. 2,331,219.95 ஆன குதிரைகள் 02 (வயது 16 - 17 இற்கு இடைப்பட்ட)
	ரூபா. 2,723,777.09 ஆன குதிரைகள் 02 (வயது 13 - 16 இற்கு இடைப்பட்ட)
	ரூபா. 3,092,972.50 ஆன குதிரைகள் 02 (வயது 11 - 13 இற்கு இடைப்பட்ட)
	ரூபா. 3,798,780.00 ஆன குதிரைகள் 02(வயது 08 - 09 இற்கு இடைப்பட்ட)

மூலம் - பொலிஸ் குதிரைப் படைப் பிரிவு

2.8.6. காணிகள் மற்றும் கட்டிடங்களின் பயன்பாடு.

இலங்கை பொலிஸ், பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் அலுவலகங்கள், படை இல்லங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் ஏனைய பல்வேறு தேவைகளின் பொருட்டு பயன்படுத்துகின்ற காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமைகளின் தன்மை மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடங்களின் பொருட்டு செலுத்தப்படுகின்ற மாதாந்த மற்றும் வருடாந்த நிதி தொகை தொடர்பான தரவுகள் பின்வரும் அட்டவணை 39 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸிற்குரிய மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள காணிகள், கட்டிடங்கள்

அட்டவணை இலக்கம் - 39

2022.12.31 ஆம் திகதியில் கொலி ஜிற்கான காணிகளின் அளவு				2022.12.31 ஆம் திகதியில் இலங்கை பொலிஸிற்குரிய வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடங்களின் எண்ணிக்கை		வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள கட்டிடங்களுக்காக 2022 ஆம் அண்டில் செலுத்தியுள்ள பணத்தொகை			
இடம்	காணிகளின் அளவு					கட்டிடங்களை பெற்றுக் கொண்டுள்ள பணி	தொகை	மாதாந்தம் செலுத்தும் வாடகை தொகை	வருடாந்தம் செலுத்தும் வாடகை தொகை (ரூபா)
	ஏக்கர்	ரூட்	பேர்ச்						
பொலிஸ் இடங்கள் - 432	1184	1	11	பொலிஸ் அலுவல கங்கள்	85	பொலிஸ் அலுவல கங்கள்	85	38,563,457.00	462,761,484.00
பொலிஸ் இடங்கள்- காவல் சாவடிகள்- உத்தியோகபூர்வ இல்லங்கள் - சுற்றுலா விடுதிகள் மற்றும் ஏனைய	646	3	7	பொலிஸ் இடங்கள்	125	பொலிஸ் இடங்கள்	125	8,313,052.50	99,756,630.00
மொத்தம் - 660	**1830**	**4**	**18**	பொலிஸ் சாவடிகள்	13	பொலிஸ் சாவடிகள்	13	136,197.50	1,634,370.00
				உத்தியோக பூர்வ இல்லங்கள் மற்றும் படை இல்லங்கள்	115	உத்தியோக பூர்வ இல்லங்கள் மற்றும் படை இல்லங்கள்	115	7,169,252.25	86,031,027.00
				ஏனைய	8	ஏனைய	8	1,042,967.00	12,515,604.00
				மொத்தம்	**346**	மொத்தம்	**346**	**55,224,926.25**	**662,699,115.00**

மூலம் - சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு

2.8.7 பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதன் முன்னேற்றம்.

பொலிஸ் கடமைகளின்கீழ் வருகின்ற எல்லா பணிகளையும் வினைத்திறனாகவும் பயனுள்ள தாகவும் நிறைவேற்றிக்கொள்வதற்கு சாதகமாக அமையும் பல பொருட்கள் மற்றும் சேவைகள் இலங்கை பொலிஸால் ஒவ்வொரு ஆண்டும் பெற்றுக்கொள்ளப்படும். அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்தல் தொடக்கம் அவர்களை பயிற்றுவித்தல், சேவையில் ஈடுபடுத்தல், குற்றப்புலனாய்வு, கிளர்ச்சிகளை ஒழித்தல், போதைப்பொருள் நிவாரணம் ஆகிய எல்லா பொலிஸ் அலுவல்களுக்கும் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை இதன்கீழ் பெற்றுக்கொள்ளப்படும். இலங்கை பொலிஸ் 2022 ஆம் ஆண்டில் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்

அட்டவணை இலக்கம் - 40

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்-கருத்திட்டம்	நடைமுறைப் படுத்திய கருத்திட்டங்கள்-பணிகள்	2022 ஆண்டில் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகள்	செலவினம் (ரூபா.மில்)	கையிருப்பு - இரசீதுகள்	தற்போதுள்ள முன்னேற்றம் (%) (2022.12.31)
	மீண்டுவரும் செலவினம்					
1	225-1-1-0-1201	**எழுதுகருவி பொருட்கள்**	2,429,000.00	2,153,566.05	177,100.00	96%
மொத்தம் (ரூபா)			**2,429,000.00**	**2,153,566.05**	**177,100.00**	**96%**
2	225-1-1-0-1203-(1)	சீரூடை	1,160,751,967.00	605,073,138.00	141,200,400.00	63%
3	225-1-1-0-1203-(5)	கால்நடை உணவு	80,000,000.00	33,340,569.00		
மொத்தம் (ரூபா)			**1,240,751,967.00**	**638,413,707.00**	**141,200,400.00**	63%
4	225-1-1-0-1205-(5)	களஞ்சிய உபகரணங்கள்	176,873,189.00	130,116,326.12	80,765,703.00	100%
5	225-1-1-0-1205-(6)	தோட்டாக்கல்				
6	225-1-1-0-1205-(7)	விரல் அடையாள பொருட்கள்	7,000,000.00			
7	225-1-1-0-1205-(8)	புகைப்பட பொருட்கள்	15,000,000.00			
		குற்றப் பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான பொருட்கள்				
மொத்தம் (ரூபா)			**198,873,189.00**	**130,116,326.12**	**80,765,703.00**	**100%**
8	225-1-1-0-1401	வாடகை அடிப்படையில் வாகனங்கள்	51,000.00	50,447.43		
மொத்தம் (ரூபா)			**51,000.00**	**50,447.43**		**100%**
9	225-1-1-0-1409-(10)	பத்திரிக்கை விளம்பரங் களுக்கான செலவினங்கள்	2,900,000.00	2,432,150.20		
10	225-1-1-0-1409-(11)	பெறுகை குழுக்களுக்கான செலவினங்கள்	2,540,000.00	1,563,401.00		74%
மொத்தம் (ரூபா)			**5,440,000.00**	**3,995,551.20**		**74%**
மீண்டுவரும் செலவினம் மொத்தம் (ரூபா)			**1,447,545,156.00**	**774,729,597.80**	**222,143,203.00**	**69%**
	மூலதன செலவினம்					
11	225-1-1-0-1202-(1)	தளவாட உபகரணங்கள்	41,000,000.00	83,311,387.19		95%
12	225-1-1-0-1202-(2)	புத்தகங்கள்				
13	225-1-1-0-1202-(3)	நலனோம்பல்	25,000,000.00	23,393,944.56		
14	225-1-1-0-1202-(4)	அலுவலக உபகரணங்கள்	167,900,000.00	167,886,999.00		
15	225-1-1-0-1202-(5)	மின்சார உபகரணங்கள்	30,000,000.00	16,890,960.11		
16	225-1-1-0-1202-(6)	கணினி	145,100,000.00	95,253,702.88		
மொத்தம் (ரூபா)			**409,000,000.00**	**386,736,993.74**		**95%**

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்-கருத்திட்டம்	நடைமுறைப் படுத்திய கருத்திட்டங்கள் - பணிகள்	2022 ஆண்டில் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகள்	செலவினம் (ரூபா.மில்)	கையிருப்பு - இரசீதுகள்	தற்போதுள்ள முன்னேற்றம் (%) (2022.12.31)
17	225-1-1-0-1203-(1)	ஆயதங்கள்	105,000,000.00			
18	225-1-1-0-1203-(3)	புகைப்பட உபகரணங்கள் குற்றப் பரிசோதனை ஆய்வுகூடங் களுக்கு தேவையான உபகரணங்கள்	5,000,000.00	3,971,382.72		
19	225-1-1-0-1203-(4)	வாகனங்கள்	15,000,000.00			
20	225-1-1-0-1203-(5)	விரல் அடையாள உபகரணங்கள்	2,000,000.00			
21	225-1-1-0-1203-(6)	வாத்திய இசை உபகரணங்கள்	13,000,000.00			
22	225-1-1-0-1203-(7)	கிளர்ச்சி ஒழிப்பு உபகரணங்கள்	10,000,000.00			
23	225-1-1-0-1203-(8)	குதிரைகளுக்கு தேவையான உபகரணங்கள்	5,000,000.00			
24	225-1-1-0-1203-(9)	மோப்ப நாய்களுக்கு தேவையான உபகரணங்கள்				
25	225-1-1-0-1203-(17)	ஏனைய உபகரணங்கள்	25,000,000.00	31,782,184.68		
மொத்தம் (ரூபா)			**180,000,000.00**	**35,753,567.40**		**20%**
26	225-1-1-0-2106	**மென்பொருள் அபிவிருத்தி**	6,200,000.00	6,195,691.48		100%
மொத்தம் (ரூபா)			**6,200,000.00**	**6,195,691.48**		**100%**
மூலதனச் செலவினம் மொத்தம் (ரூபா)			**595,200,000.00**	**428,686,252.62**		**72%**
முழு மொத்தம் (ரூபா)			**2,042,745,156.00**	**1,203,415,850.42**	**222,143,203.00**	**70%**

மூலம் - இலங்கை பொலிஸ் வழங்கல் பிரிவு

2.9 இலங்கை பொலிசின் எதிர்கால இலக்குகள்

எதிர் காலத்தில் இலங்கை பொலிஸ் தமது கடமைகளை மிக வினைத்திறனாகவும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்காக இலக்காகக் கொண்டுள்ள கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும், குற்றத் தடுப்பு, போதைப்பொருள் பாவனையை தடுத்தல், புதிய தொழில்நுட்ப உபாய முறைகளின் பயன்பாடு, வாகன விபத்துகளை குறைக்கப்படுதல், பௌதீக மற்றும் மனித வளங்களின் அபிவிருத்தி, மருத்துவ சேவை ஆகிய பிரிவுகளின்கீழ் பின்வருமாறு நடைமுறைப்படுவதற்கு எதிர்பார்க்கின்றது.

2.9.1 குற்றங்களுக்கான நிவாரணங்கள் பற்றிய எதிர்கால இலக்குகள்.

I. தொழில்நுட்பம் அடிப்படையில் குற்ற விசாரணைக்கு தேவையான தொழில்நுட்ப அறிவு கொண்ட போலீஸ் அதிகாரியை உருவாக்குதல்.

II. குற்றவியல் விசாரணைப் பணியில் அதிநவீன மென்பொருள் மற்றும் வன்பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் புலனாய்வுப் பணியை உயர் மட்ட செயல்திறனுக்குக் கொண்டுவருதல்.

III. சமூகத்தின் நல்வாழ்வைப் பாதிக்கும் உணர்ச்சிகரமான மற்றும் சர்ச்சைக்குரிய குற்றங்களை விரைவாகத் தீர்க்க தொழில்நுட்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துதல்.

IV. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள சர்வதேச பொலிஸ் பிரிவானது, மத்திய வங்கி, குடிவரவு-குடியகழ்வு திணைக்களத்துடன் வலையமைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய விசேட நிறுவனங்கள்எதிர்காலத்தில் வலையமைக்கப்படும்.

V. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் டிஜிட்டல் தரவு பகுப்பாய்வுப் பணிக்கு தேவையான துணைக் கருவிகளைப் பெற்றுக்கொள்ளதல் மற்றும் ஆய்வு அலுவலர்களை பயிற்றுவித்தல்

VI. இணையத்தளம் மற்றும் கணினி குற்றங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுதல் தொடர்பாக சமூகத்தின் எல்லா தரப்புகளையும் முழுமையாக அறிவுறுத்தல். (இதன்கீழ் 24835 மாணவர் களையும் 8955 வயோதிப நபர்களையும் இவ்வாண்டில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.)

VII. கணினி குற்றப் புலனாய்வை முறைசார்படுத்துவதற்கு எல்லா பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் உப அலகுகளை தாபித்தல்

VIII. சட்ட விரோதமான சொத்துக்கள் தொடர்பில் ஆய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக தற்போது தாபிக்கப்பட்டுள்ள ஆய்வு அலகுகளை 8 ஆய்வு அலகுகள் வரை அதிகரித்தல்

VIX. பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக காலி, பதுளை, அவிசாவளை மற்றும் பேருவளை பிரதேசங்களில் உப பிரிவுகளை நிறுவுதல்.

X. உளவு தகவல் சேகரிப்பு செயல்முறையை மேலும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தொழில் முறை புலனாய்வு அதிகாரிகளை பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தப்படும்.

XI. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்திற்குள் கடத்தல் மற்றும் ஆட்கடத்தலை தடுப்பதற்காக ஒரு பிரிவு நிறுவப்படும்.

2.9.2 போதைப்பொருள் தடுப்புக்கான எதிர்கால இலக்குகள்.

இந்த நாட்டில் பல குற்றச்செயல்களுக்கு மூலகாரணமாக விளங்கும் போதைப்பொருள் பாவனையை குறைப்பது இலங்கை பொலிஸாரின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். போதைப் பழக்கத்திற்கு எதிரான போராட்டம் இன்றியமையாத காரணியாக இருப்பதால், சமூகத்தின் அமைதிக்கும் மக்களின் நல்லிருப்புக்குமான எதிர்கால இலக்குகள் பின்வருமாறாகும்.

I. முக்கியமாக இந்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இயங்கும் போதைப்பொருள் வலையமைப் புகள், அவற்றுக்கிடையிலான தொடர்புகள், பிரதான கடத்தல்காரர்கள் பற்றிய தகவல்கள் தொடர்பில் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டு அதன் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

II. ஒவ்வொரு உள்ளூர் பொலிஸ் பிரிவிலும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்துடன் இணைந்த உப பிரிவுகளை நிறுவுதல்.

III. இலக்கு சோதனைகளை நடத்தி இலங்கையில் இயங்கும் சக்தி வாய்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர்களின் வலையமைப்புகளை சீர்குலைத்தல்.

IV. மீன்பிடி கப்பல்கள் மூலம் மேற்கொள்கின்ற போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்காக குறித்த கப்பல்களை ஆய்வு செய்வதற்கு ஜி.பி.எஸ். மற்றும் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் பயன்பாடு.

V. உளவு தகவல்கள் ஊடாக மீன்பிடி செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை ஆய்வு செய்வதன் மூலம் போதைப்பொருள் கடத்தல்கள் பற்றிய சந்தேக நபர்களை அடையாளம் காணுதல்.

VI. போதைப்பொருள் கடத்தலை இல்லாதொழிப்பதற்கு கைது செய்யப்படுகின்ற கடத்தல் காரர்கள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் தரவுத்தளமாகப் பேணி விசாரணைகளை மேலும் திறம்பட மேற்கொள்ளுதல்.

VII. வான், கடல் மற்றும் தபால் வழிகள் மூலம் பொருட்களை விநியோகிக்கும் நிலையங்களை இனங்கண்டு போதைப்பொருள் கடத்தலைக் கண்டறிதல் மற்றும் போதைப்பொருள் கண்டறிதலில் பயிற்றுவிக்கப்பட்ட மோப்ப நாய்களைப் பயன்படுத்துதல்.

VIII. 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க போதைப்பொருள் பாவனை மறுவாழ்வுச் சட்டத்தின் விதிகளின் கீழ், புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர்கள் மீண்டும் அதற்கு அடிமையாதலை தடுப்பதற்கு முதன்மையான திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

IX. போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புகளை மேற்கொள்கையில் போதைப்பொருள் சட்டம் அமுலாக்கப்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் தொழில்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற வேறு நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை கட்டியெழுப்புதல் மற்றும் தகவல்களை பரிமாற்றிக்கொள்ளும் வலையமைப்பாக வலையமைப்பாக செயற்படுவதன் மூலம் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளுதல்.

X. ஒவ்வொரு பிராந்திய பொலிஸ் பிரிவிலும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து உப பிரிவுகளை நிறுவுதல்.

XI. தற்போது பயன்பாட்டில் உள்ள பழைய இயந்திரங்களுக்கு பதிலாக நவீன இயந்திரங்களை கொள்வனவு செய்வதன் மூலம் பொலிஸ் போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளின் செயற்பாடுகளை திறம்பட மேற்கொள்ளுதல்.

2.9.3 வாகன விபத்துகளை குறைத்துக்கொள்வதற்கான எதிர்கால இலக்குகள்

I. அதிவேக வீதிகள் சார்ந்து வாகன விபத்துகளை குறைத்துக்கொள்வதற்காக, வாகன விபத்துகள் நிகழ்வதற்கு அதிக வாய்ப்புள்ள ஓட்ட நேரங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக சாரதிகளை அறிவுறுத்துவதற்காக இலத்திரனியல் மற்றும் அச்சீட்டு ஊடகங்கள் மூலம் விசேட நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

II. வாகன விபத்துகளை தடுப்பதற்காக எல்லா வகையிலும் புதிய தொழில்நுட்ப உபாய வழிமுறை களை பயன்படுத்துவதற்கு தேவையான அறிவு மற்றும் தொழில்நுட்ப கருவிகளின் பயன்பாட்டினை மேம்படுத்தல்.

III. வாகன விபத்துகளை குறைத்துக்கொள்ளும் முக்கிய கட்ட நடவடிக்கையான அறிவுறுத் தல்களை மேற்கொள்வதன் கீழ், சமூகத்தின் எல்லா மட்டங்களும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் பாரிய அளவில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

IV. பல்வேறு அறிவுறுத்தல்கள், கண்காட்சி கூடங்கள், நிகழ்ச்சிகள் என்பன நடாத்தி சமூகத்தின் அனைத்து மட்டங்களும் பிரதிநிதித்தவப்படுத்தும் வகையில் அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல்.

V. மேல் மாகாணத்தை கேந்திரமாக கொண்டு மாவட்ட மட்டத்தில் போக்குவரத்து தொழில் பாடுகளை மிகவிரைவில் மேற்கொள்ளுதல்

VI. வாகன விபத்துகளின் தரவுகளை பயன்படுத்தி, விஞ்ஞான முறையிலான அணுகுமுறையின் ஊடாக, ஆய்வு ரீதியாக வாகன விபத்துகள் அதிகமாக நிகழ்கின்ற பிரதேசங்களை அடையாளம் காணதல் மேலும் அதற்கான பல்வேறு விடயங்களை கற்கையிட்டு தீர்வு வழங்கும் முறைமை மேலும் மேம்படுத்தல்.

VII. வாகன விபத்துகளின் பொருட்டு ஓட்டத்திற்கு பொருத்தமற்ற வாகனங்களை, பரிசோதனை செய்து தடைசெய்யும் கட்டளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அதிகரித்தல்.

VIII. அதிவேக பாதைகளில் வாகன ஓட்டத்தின்போது நிழ்கின்ற தவறுகளுக்கு வழங்கப்படுகின்ற அபராதங்களின் பொருட்டு தொலைபேசி மூலம் பணம் செலுத்தும் வசதிகளை மக்களுக்கு வழங்குதல்.

IX. தற்போது பாரிய பிரச்சினையாகியுள்ள வீதி நெருக்கடிக்கு தீர்வு வழங்கும் நடவடிக்கையாக, ஒரு திசைக்கு மோட்டார் வாகனம் ஓட்டுதல் தொடர்பாக மேலும் கற்கையிட்டு குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளை சமர்ப்பித்தல்.

2.9.4 மனித வளங்களின் அபிவிருத்தி இலக்குகள்.

I. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 2735/22 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் எதிர்கால இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல்

II. ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் ஏற்படும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக வருடாந்தம் உரிய வகையில் தரமுயர்வுகளை வழங்குதல் மற்றும் நீண்ட காலமாக தரமுயர்வுகள் பெறாத அலுவலர்களுக்கு தரமுயர்வுகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் முன்கொண்டுச் செல்லுதல்

III. எல்லா புதிய ஆட்சேர்ப்புகளும் மற்றும் தரமுயர்வுகளும் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கமைவாக முறையாக மேற்கொள்ளுதல்

IV. இலங்கை பொலிஸின் நிரந்தர படையில் உள்ள எண்ணிக்கையான 85144 தொடக்கம் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியின் எண்ணிக்கை 102097 வரை அதிகரிக்கும் செய்றாபடுகளை துரிதப்படுத்தல்

V. பொதுவாக மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகளின்கீழ் பின்வரும் வகையில் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

எதிர்காலத்தில் மேற்கொள்வதற்குள்ள ஆட்சேர்ப்புகள்

அட்டவணை இலக்கம் - 41

தொ. இல	பதவி	ஆட்சேர்ப்புச் செய்வதற்குள்ள பிரிவுகள்	செய்வதற்குரிய		தற்கால முன்னேற்றம்
			2023	2024 உத்தேச	
1	பொலிஸ் கான்ஸ்டபிள்		4945		2022 ஆண்டில் பொலிஸ் காண்ஸ்டபிள் பதவியில் 2217 அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்துள்ளதுடன், அரசாங்க சேவைக்கான அனைத்து ஆட்சேர்ப்புகளும் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு கட்டளை விடுக்கப்பட்டதால் 2022ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்குஉத்தேசித்துள்ள எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்யவில்லை என்பதுடன், எதிர்வருங் காலத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்புகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
2	மகளிர் பொலிஸ் கான்ஸ்டபிள்		532		
3	பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி				
4	உப பொலிஸ் ரிசோதகர்				
5	மகளிர் உப பொலிஸ் பரிசேதகர்				
6	பொலிஸ் கான்ஸ்டபிள்				
7	மகளிர் பொலிஸ் கான்ஸ்டபிள்				
8	பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி				

மூலம் - பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் பிரிவு

VI. 2020.01.31 ஆம் திகதிய சீ.ஆர்.டீ.எம். 2166 இன்படி இலங்கை பொலிஸ் படையினறுக்கு தேவையான எண்ணிக்கை தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவில் ஒருங் கிணைப்புக் குழு மூலம் ஆய்வினை மேற்கொண்டுள்ளதுடன், குறித்த தரவுகளை அடிப்படை யாகக்கொண்டு 2021 ஆம் ஆண்டில் மொத்த படை எண்ணிக்கையை 102097 வரை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஆய்வுகள் மூலம் அடையாளம் காணப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்காலத்தில் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

செயற்பாட்டு மற்றும் பிராந்திய பொலிஸ் பிரிவுகளுக்கு தேவையான மொத்த படையணி

அட்டவணை இலக்கம் - 42

தொடர் இலக்கம்	பதவி	பிராந்திய பிரிவுகள்			செயற்பாட்டு பிரிவுகள்			மொத்த படையின் எண்ணிக்கை		
		தேவையான படையணி எண்ணிக்கை	இணைக்கப்பட்டுள்ள படையணி எண்ணிக்கை	பற்றாக்குறையான படை எண்ணிக்கை	தேவையான படையணி எண்ணிக்கை	இணைக்கப்பட்டுள்ள படையணி எண்ணிக்கை	பற்றாக்குறையான படை எண்ணிக்கை	தேவையான படையணி எண்ணிக்கை	இணைக்கப்பட்டுள்ள படையணி எண்ணிக்கை	பற்றாக்குறையான படை எண்ணிக்கை
1	**SDIG**	9	7	2	4	4	0	13	11	2
2	**DIG**	26	21	5	26	20	6	52	41	11
3	**WDIG**	0	0	0	1	1	0	1	1	0
4	**SSP**	54	65	-11	92	90	2	146	155	-9
5	**WSSP**	0	1	-1	10	6	4	10	7	3
6	**SP**	70	20	50	65	21	44	135	41	94
7	**WSP**	3	1	2	6	1	5	9	2	7
8	**ASP**	155	110	45	264	108	156	419	218	201
9	**WASP**	6	1	5	10	0	10	16	1	15
10	**CI**	904	1434	-530	835	650	185	1739	2084	-345
11	**WCI**	61	94	-33	72	72	0	133	166	-33
12	**IP**	2229	1619	610	1281	716	565	3510	2335	1175
13	**WIP**	151	194	-43	191	142	49	342	336	6
14	**SI**	3357	5177		2877	1858	1019	6234	7035	-801
15	**WSI**	469	319	150	485	307	178	954	626	328
16	**TSI**	47	29	18	81	43	38	128	72	56
17	**SM**	3	10	-7	55	11	44	58	21	37
18	**SMD**	0	1	-1	0	0	0	0	1	-1
19	**PS**	28053	20022	8031	8543	5123	3420	36596	25145	11451
20	**WPS**	2231	2277	-46	909	655	254	3140	2932	208
21	**PC**	36768	18732	18036	12451	7324	5127	49219	26056	23163
22	**WPC**	6661	3568	3093	2153	1336	817	8814	4904	3910
23	**PSD**	285	335	-50	305	215	90	590	550	40
24	**PCD**	2734	1832	902	1527	1026	501	4261	2858	1403
மொத்தம்		84276	55869	28407	32243	19729	12514	116519	75598	40921

மூலம் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

VII. அலுவலர்களின் கணினி படிப்பறிவை அதிகரிப்பதற்காக தற்போது நடாத்தப்படுகின்ற அடிப்படை கணினி கற்கைநெறிகளுக்கு மேலதிகமாக உயர் கணினி பயிற்சி கற்கை நெறிகளை ஆரம்பித்தல்

VIII. பொலிஸ் விசேட அதிரடிப்படையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுதல்.

IX. உலகின் புதிய போக்குகளை அடையாம் காணப்பட்டு அதற்கேற்ப அவர்களின் கடமைகளை மேற்கொள்வதற்கு அலுவலர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிக பயிற்சிகளில் ஈடுபடுத்தல்

X. ஆங்கில மொழி உட்பட பிற மொழிகளில் தேர்ச்சியினை வழங்குவதற்காக அங்கீகரிக்கப் பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல்

XI. இலங்கை பொலிஸ் அதிகாரிகளின் உயர்கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக, அரச பல்கலைக்கழகங்களின் கீழ் பட்டப்படிப்புகளை கற்கும் வாய்ப்புகளை அதிகரித்தல்

XII. வெளிநாட்டு அரசாங்கங்களுடன் அறிவையும் பயிற்சியையும் பரிமாறிக்கொள்வதற்கு புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்ளதல், தற்போது உறவுகளை பராமரிக்கப் படுகின்ற வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் தொடர்பினை மேலும் விருத்தி செய்தல் மற்றும் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் பொலிஸ் அலுவலர்களுக்கு அறிவு மற்றும் பயிற்சியைப் பெறுவதற்கான வாய்ப்புகளை விரிவாக்குதல்.

2.9.5 பௌதீக வளங்களின் அபிவிருத்தி இலக்குகள்.

பின்வரும் அட்டவணை பிரகாரம் எதிர்வருங் காலங்களில் நிருமாணிப்புகள், பழுதுபார்த்தல் கருத்திட்டங்கள் மற்றும் புதிய பொலிஸ் நிலையங்கள், காவல் சாவடிகள் மற்றும் செயற்பாட்டு பிரிவுகளை ஆரம்பிக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

I. 2023 ஆம் ஆண்டில் இலங்கை பொலிஸாரிடம் கையகப்படுத்தப்பட்டு கையளிக்கப் படவுள்ள காணிகளை விரைவாக கையகப்படுத்துதல்.

II. அத்திடிய காணியில் உள்ள அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்புகளை முறையாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

III. பல்வேறு திட்டங்களால் இழக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களுக்குப் பதிலாக பொருத்தமான வகையில் குடியிருப்புகளை பெற்றுக்கொள்ளுதல்

IV. நாட்டின் பொருளாதார நிலைப்பாட்டைக் கட்டியெழுப்பியதன் பின்னர் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள புதிய பொலிஸ் நிலையங்கள் மற்றும் காவட் சாவடிகளை ஆரம்பிக்கப்படுதல்.

- குண்டசாலை பொலிஸ் மருத்துவமனையில் சுகாதார சேவைகளை மேம்படுத்த பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- வெளியக நோயாளர் பிரிவு மற்றும் அலுவலர்களின் வதிவிட தேவைகளுக்காக நான்கு மாடி கட்டிடம் மற்றும் திருமணமான அலுவலர்களுக்கான வீடமைப்பு தொகுதி நிருமாணித்தல்

- மருத்துவமனை வளாகத்தினுள் சகல வசதியுடன் கூடிய உள்ளக விளையாட்டு வளாகம் நிருமாணிக்கப்படுதல்
- மருத்துவமனை ஆய்வகம் மற்றும் மருந்தகம் நவீனமயமாக்கல்.
- மருத்துவமனையில் சிறிய அறுவை சிகிச்சை நிலையம் தாபித்தல் மற்றும் மின்னுயர்த்தி பொருத்துதல்
- மருத்துவமனை சிற்றுண்டிச்சாலை விரிவுபடுத்தல்

